வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
கல்முனை NET e paper
kalmunainet.com






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
சார்வரி வருடம் வைகாசி 01 (15.05.2021) இதழ் : 16

# கிழக்கில் 6075 தொற்றுக்கள்!

## 59 பேர் மரணம்; திருமலையில் கோரத்தாண்டவம்!

## திருமலை 1187, அம்பாறை 743, மட்டக்களப்பு 386, கல்முனை 63



(வேதசகா)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா மூன்றாவது அலையில் இதுவரை 2379பேருக்கு கொரொனாத்தொற்று ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது அலையில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 1187 பேரும், அம்பாறைப்பிராந்தியத்தில் 743 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 386 பேரும், கல்முனைப்பிராந்தியத்தில் 63 பேரும் தொற்றுகுள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்தையும் தாண்டி 1187பேர் கொரோனாத் தொற்றுக்கு 02

## நாடெங்கும் வீதிகள் வெறிச்சோட்டம்!

### பயணத்தடைக்கு பூரண ஒத்துழைப்பு



நாட்டில் கொரோனா கட்டுப்படுத்துமுகமாக நேற்று(14)முதல் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட பயணத்தடை கிழக்குமாகாணத்தில் பூரண வெற்றியளித்துள்ளது.

நேற்று கடைகள் யாவும் பூட்டப்பட்டு போக்குவரத்துகள் முற்றாக முடக்கப்பட்டன.

வழமைக்குமாறாக மக்கள் சுயகட்டுப்பாட்டுடன்வீடுகளை விட்டு வெளியேறாமல் அரசாங்கத்தின் அறிவிப்பிற்கு ஒத்துழைத்தனர்.

முஸ்லிம்மக்கள் புனித ரமழான் பெருநாளை வீட்டிலிருந்தவாறே 02

## அவுஸ்திரேலியா செல்ல முயன்ற வட,கிழக்கைச் சேர்ந்த 30 பேர் கைது!

(நமது நிருபர்)

சட்டவிரோதமாக கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு பயணம் செய்ய முயன்ற வடக்கு கிழக்கிலுள்ள 29 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு பயணிக்கும் நோக்கில் சிலாபம் இரணவில் பிரதேசத்தில் வீடொன்றில் பதுங்கி இருந்த 30 நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

13 ஆம் திகதி 14 பேரும் நேற்று (14) அதிகாலையில் 02


## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஜூன் முதல் மாதாந்த கொடுப்பனவு

(நமது நிருபர்)

நாட்டில் இயங்கும் பதிவுசெய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2, 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி ஜயசுந்தர நிதி 02

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சைனோபார்ம் தடுப்பூசி!



(நமது நிருபர்)

எவ்வித ஒவ்வாமையையும் கொண்டிராத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சைனோபார்ம் தடுப்பூசியை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க 02

## இலங்கையில் சுகாதாரக் கட்டமைப்பு வீழும் அபாயம்

### வைத்தியர் செனல் பெர்ணாண்டோ எச்சரிக்கை

(நமது நிருபர்)

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் நோயாளர் படுக்கைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் ஐயாயிரத்திற்கும் அதிகமான கொரோனா நோயாளர்கள் 02

## திங்கள் முதல் மேலும் பல பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

(நமது நிருபர்)

நாட்டில் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 42 கிராம சேவகர் பிரிவுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 02

## அதிகமாக தடுப்பூசி போட்டவர் தீவிர கண்காணிப்பில்



இத்தாலியில் 23 வயது பெண் ஒருவருக்கு தவறுதலாக ஆறு டோஸ் அளவு பைசர் நிறுவனத்தின் கொவிட்19 தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரும் அந்த மாணவிக்கு காய்ச்சலுக்கு கொடுக்கப்படும் 'பேரசிட்டமொல்' உள்ளிட்ட மருந்துகள் 02

## முள்ளிவாய்க்காலில் 22 ஆம் திகதி வரை நினைவு கூர தடை

(நமது நிருபர்)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் முன்றலில் போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. அதன்படி நாளை 16ஆம் திகதி தொடக்கம் 02

**வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து செல்வோம்...**

கல்முனை NET e paper kalmunainet.com
2nd YEAR ANNIVERSARY




# தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகள் வழக்கு தாக்கல்

(நமது நிருபர்)

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள முஸ்லிம் அமைப்புகளில் சில தமது தடைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்துள்ளன.

சிலோன் தவ்ஹீத் ஐக்கிய தவ்ஹீத் ஜமாஅத் எனப்படும் அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் ஆகியவை நேற்று முன்தினம் (12) தடைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்துள்ளன.

மேலும் தடை உத்தரவு சட்டத்தின் உரிய நடைமுறைக்கு இது மாற்றமானதும் முரணானதும் என்பதால் தடையை நீக்கி ஜனநாயகத்தை நிலை நிறுத்துமாறும் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டிலிருந்து வந்தோராலேயே இந்திய, பிரித்தானிய தொற்று பரவல்!

(நமது நிருபர்)

இலங்கையில் கண்டறியப்பட்டுள்ள இந்தியா மற்றும் பிரித்தானியாவின் கொவிட்19 வைரஸின் புதிய திரிபானது வெளிநாட்டிலிருந்து வருகைத்தந்தவர்கள் மூலமே பரவியுள்ளதால் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் தினமும் அதிகளவான கொவிட்19 தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர். தற்போதைய சூழலில் தினமும் 2500 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் பதிவாகி வருகின்றனர்.

எதிர்வரும் நாட்களிலும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுமென எதிர்பார்க்கிறோம். தற்போது பதிவாகும் நோயாளர்களையும்விட அதிகமானவர்கள் எதிர்காலத்தில் பதிவாகக் கூடும்.

## முள்ளிவாய்க்காலில் 22 ஆம் திகதி வரை நினைவு

22ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் பகுதியில் எந்த நிகழ்வும் நடத்தகூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்திற்கமைய பொது மக்கள் கூடக்கூடாது என முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக இந்த தடையுத்தரவை பெற்றுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தாக்கி அழிக்கப்பட்டமையும் நினைவுக்கல் அகற்றப்பட்டமையும் தமிழர் மத்தியில் பாரிய அதிர்வலைகளை தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திங்கள் முதல் மேலும் பல பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

தனிமைப்படுத்தப்படவுள்ளதாக இராணுவ தளபதியின் பிந்திய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான்குளம் கிராமசேவகர் பிரிவு சி பிரிவிலுள்ள நெசவு நிலைய வீதி வேலாப்பொடி வீதி கண்ணகி அம்மன் ஆலய வீதியும் கிரான்குளம் கிராமசேவகர் பிரிவு பி பிரிவிலுள்ள லேக்றோட் வீதி விதானையார் வீதி அப்புகாமி வீதிகள் முதலான பகுதிகள் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா காவல் துறை அதிகார பிரிவில் கிண்ணியா பெரியகிண்ணியா குட்டிக்கராச்சி அல்தர் நகர் பெரியாத்துமனை மலிந்துார் ரஹுமானியான் நகர் சின்னகிண்ணியா மண்வெளி கட்டையாறு குறிஞ்சான்கேணி முனைச்சேனை முதலான கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் பல கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

## இலங்கையில் சுகாதாரக் கட்டமைப்பு வீழும் அபாயம்

வீடுகளிலேயே சிகிச்சைப் பெற்று வரும் நிலை காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் செனல் பெர்ணாண்டோ எதிர்வரும் இரண்டு வாரங்கள் இலங்கைக்கு மிகவும் தீர்க்கமான காலகட்டமாக அமையும் நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாகவும் அதிகரிக்கலாம் என எச்சரித்துள்ளார்.

அரசாங்கம் மிகவும் தாமதித்தே பயணக்கட்டுப்பாட்டினை அறிவித்திருக்கின்றது. எனினும் இவ்வாறு அமுல்படுத்தப்படுகின்ற பயணக்கட்டுப்பாட்டின் ஊடாக பெறப்படுகின்ற பிரதிபலன் அடுத்த ஒருவாரம் இல்லது இரண்டு வாரத்தின் பின்னரே தெரியவரும்.

வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்தை அண்மித்திருக்கின்றது. மருத்துவத்துறை மற்றும் வைத்தியசாலைகளில் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் வளங்களின் பற்றாக்குறையும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமை தொடர்ந்தும் ஏற்பட்டால் முழு சுகாதாரத்துறைக் கட்டமைப்பும் வீழ்ந்துவிடும் அபாயமும் உள்ளது.

அரசாங்கம் நேயாளர் படுக்கைகளை தயார்செய்து வருகின்றது. அதனை வரவேற்கின்றோம்.

எனினும் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க போதுமான பணிக்குழு இல்லை என்பதையும் அரசாங்கம் கவனத்திற்கொள்ள வேண்டும் என்றார்.

## அதிகமாக தடுப்பூசி போட்டவர் தீவிர கண்காணிப்பில்

கொடுக்கப்பட்டது. அவரது உடல்நிலை சீராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மாணவிக்கு ஒரு டோஸ் அளவுக்குப் பதிலாக முழு குப்பி அளவு தடுப்பூசி மருந்தை தாதி தவறாக செலுத்திவிட்டார். இத்தாலியின் மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் இந்தச் சம்பவம் பற்றி தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜெர்மனி, இஸ்ரேல் ஆகிய நாடுகளிலும் அளவுக்கு அதிகமாக பைசர் தடுப்பூசி போடப்பட்டதாக முன்னதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சைனோபார்ம்

அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் அதிகபடியான மக்கள் தொற்றுக்கு ஆளாகின்றனர் பலர் அதனால் உயிரிழந்தும் உள்ளனர். இதனால் இதனைக் கட்டுக்குள் கொண்டுவர இலங்கை இராஜாங்கம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வந்தது. கொரோனா தொற்று பரவல் வேகம் அதிகரிக்குமானால் எதிர்வரும் 4 வாரங்கள் தீர்மானமிக்கது

இதனைக்கருத்திற்கொண்டு மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 2 வாரங்களுக்குள் 6 இலட்சம் ஸ்புட்னிக்ள தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நாடெங்கும் வீதிகள் வெறிச்சோட்டம்!

தொழுகையிலீடுபட்டு கொண்டாடினர். வெளிநடமாட்டத்தை தவிர்த்துக்கொண்டனர்.

வெள்ளிக்கிழமை என்றாலும் இந்துக்கள் ஆலயத்திற்குச்செல்லாமல் தவிர்த்தனர்.

பிரதான வீதிகள் பெரும்பாலும் வெறிச்சோடிக்காணப்பட்டன. முப்படையினர் கடந்தகாலங்களைப்போல ஆங்காங்கே நிறுத்திவைக்கப்படாதபோதிலும் மக்கள் வெளியேறாமல் சுயகட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டதைக் காணமுடிந்தது.

பெரும்பாலும் அத்தியாவசிய தேவைக்காக மட்டுமே ஒருசிலர் பயணித்தனர்.

## ஜூன் முதல் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த

அமைச்சின் செயலாளர் எஸ், ஆர். ஆட்டிகலவுக்கு அது தொடர்பில் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அதற்கான நிதி மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி ஆரம்ப பாடசாலை ஆரம்ப கல்வி பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் கல்விச்சேவை இராஜாங்க அமைச்சுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நிதி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி.....

## கிழக்கு மாகாணத்துக்கு பேரிடி

மாகாணங்களுக்கும் இந்தத் தாக்கம் இல்லாமல் இல்லை. பரீட்சை பெறுபேற்றில் முதன்மை வகிக்கின்ற ஏனைய மாகாணங்களும் நிலைகுலைந்து தான் மீண்டெழுந்திருக்கின்றன என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

பாடத்திட்டங்களை முழுமையாக பூர்த்தி செய்யாத நிலையில், பாடசாலை கற்பித்தலில் நம்பிக்கை இழந்த மாணவர்கள், தனியார் கல்வி நிலையங்களை நாடும் துப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். நகரங்களிலும் கிராமங்களிலும் அபரிமிதமாக முளைத்திருக்கும் தனியார் கல்வி நிலையங்கள் இதற்கு சான்று பகர்கின்றன.

கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான பாடசாலைகளில் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. ஒருசில தேசிய பாடசாலைகளில் கற்பிக்கும் பிரபலமான ஆசிரியர்கள் சிலர் Tution center (டியூசன் ) களுக்கு வருமாறு மாணவர்களை நேரடியாக தூண்டுகின்றனர்.

இதேபோல, சில பாடத்திட்டங்களை தொடங்குவதற்கு முன்னர், 'இதனை டியூஷனில் முடித்து விட்டீர்களா' ?என ஒரு சில ஆசிரியர்கள் வகுப்புகளில் கேட்கின்றனர். இவையெல்லாம், இலவசக் கல்விக்கும் பாடசாலை கற்பித்தலுக்கும் ஏற்பட்டிருக்கும் பேரிடிகள் என்பதை மிகுந்த மன வேதனையுடன் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இலவசக் கல்விக்காக கோடிகோடியாய் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது என்றால், அந்த நிதியானது தனியார் கல்வி நிலையங்களை வளர்ப்பதற்காக அல்ல, என்பதை ஆசிரியர்களும் அதிபர்களும் நிர்வாக அதிகாரிகளும் புரிந்துகொள்ளவேண்டும். 2020 முடிவுகளை வைத்துக்கொண்டு சில பாடசாலைகள் மார்பை உயர்த்தி பெருமைப்பட்டுக் கொண்டாலும், தனியார் கல்வி நிலையங்களும் பிரத்தியேக வகுப்புகளுந்தான் பரீட்சை முடிவுகளை தீர்மானிக்கின்றன என்பதே கசப்பான உண்மை.

ஒருசில மாகாண கல்வி பணிப்பாளர்களும் வேறு சில வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புகளை நடத்தும் போது, பாடசாலைகளில் மாணவர்கள் நம்பிக்கை வைப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு இல்லாத கற்பித்தலும், பாடசாலை கல்வியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கை இழப்பும், தனியார் கல்வி நிறுவனங்களின் அபரிமிதமான வளர்ச்சியால் இலவசக் கல்விக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பும், கிழக்கு மாகாணத்தின் இன்றைய கல்வி வீழ்ச்சிக்கு வித்திட்டிருக்கிறது.

## கிழக்கில் 6075 தொற்றுக்கள்!

இலக்காகியுள்ளனர். அதன்படி கிழக்கில் திருமலை மாவட்டம் ஆபத்தான நிலையிலிருப்பதை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. முதலிருஅலைகளின்போது ஆக 864ஆகஇருந்த இவ் எண்ணிக்கை தற்போது மூன்றாவது அலையுடன் மொத்தமாக 2051ஆக எகிறியுள்ளது.

கிழக்குமாகாண சுகாதாரத்திணைக்களம் வெளியிட்ட புள்ளவிபரங்களிலிருந்து இதனை அறியமுடிகிறது.

கடந்த இருஅலைகளின்போதிருந்த மாவட்ட தொற்றுநிலை தலைகீழாக மாறி திருகோணமலை அதிகூடிய தொற்றையும் அதிகுறைந்த தொற்றை கல்முனைப்பிராந்தியமும் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மூன்று அலைகளிலும் மொத்தமாக இதுவரை 6075பேர் தொற்றுக்கிலக்காகிய அதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் 2051பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். தொற்றுக்குள்ளான 6075பேரில் இதுவரை 5100பேர் குணமாகிவீடு திரும்பியுள்ளனர். அதேவேளை 59பேர் மரணிக்க 916பேர் தொற்றிலுள்ளனர்.

கிழக்கில் கொரோனா முதல் அலையில் 23பேரும், இரண்டாவது அலையில் 3673பேரும், தொற்றுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.தற்போது மூன்றாவது அலையில் இதுவரை 2379பேர் இலக்காகியுள்ளனர்.

கிழக்கில் இதுவரை59பேர் மரணித்துள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 23 பேரும் அம்பாறைப்பிராந்தியத்தில் 07 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 பேரும் கல்முனைப்பிராந்தியத்தில் 13 பேரும் மரணித்துள்ளனர்.

கிழக்கிலுள்ள 10 கொரோனா சிகிச்சைநிலையங்களில் தற்போது 726பேர் சிகிச்சைபெற்றுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியா செல்ல முயன்ற வட,கிழக்கைச்

மற்றைய 16 பேரும் கைது செய்யப்பட்டதாக தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு முல்லைத்தீவு வெல்லவாய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

கல்முனை NET
kalmunainet.com
e paper

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதானவீதி பாண்டிருப்பு, கல்முனை
T.P.:0776965343, 0762933026, 0773457915
E.Mail: kalmunainet@gmail.com, ceditorsaga@gmail.com
சிந்தனைக்கு விருந்து

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண்பு அரிது.

# கிழக்கு மாகாணத்துக்கு பேரிடி

**அண்மையில்** வெளியாகிய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 2020 தேசிய மட்டப் பெறுபேறுகள் மிகவும் அதிர்ச்சி அளிக்கின்றன.இந்த பரீட்சை முடிவுகளின் படி, தேசிய மட்டத்தில் கிழக்கு மாகாணம் 9வது இடத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறது. 2019ஆம் ஆண்டு பரீட்சையில் நான்காவது இடத்தில் இருந்த இந்த மாகாணம், 2020இல் திடீர் சரிவை சந்தித்திருப்பது கல்வியாளர்கள், புத்திஜீவிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களும் தேசிய ரீதியான ஒப்பீட்டளவில் மிகவும் பின்னடைவைச் சந்தித்து இருக்கின்றன. இதன்படி, திருமலை மாவட்டம் 14வது இடத்திலும், மட்டக்களப்பு 22 ஆவது இடத்திலும், அம்பாறை 24 ஆவது இடத்திலும் இருப்பதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2020 மேலும் சரிவையே சந்தித்து இருக்கின்றன. இதைவிடவும், இந்த மாகாணத்தில் சகல பாடங்களிலும் சித்தியடையாதவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது. 2019 இல் 9.721 வீதமாக இருந்த இந்தத் தொகை, 2020 இல்10.36 வீதமாக 1,820 ஆக அதிகரித்துள்ளது.

உண்மையில், யுத்த கால கட்டங்களிலும் காணாத மிகப் பெரிய கல்வி வீழ்ச்சியாகவே கல்வியாலாளர்கள் இதனை பார்க்கின்றனர். கிழக்கு மாகாணத்துக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பது ஆழமாகப் பார்க்கப்பட வேண்டிய விடயம்.

கொரோனா கால கல்வி நிலையில் ஏற்பட்ட தாக்கமா? அல்லது கற்பித்தலிலும்,கற்பித்தல் வழிமுறைகளிலும் ஏற்பட்டிருக்கும் ஏனோ தானோ என்ற அலட்சியமா? அல்லது வேறு காரணங்களின் பாதிப்பா? என்பது நம்மை குடைந்து எடுக்கும் கேள்வியாகும்.

நாட்டிலுள்ள ஏனைய மாகாணங்களைப் போலவே, கிழக்கு மாகாணத்திலும் தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள் என கல்விக்கூடங்கள் வளர்ச்சி கண்டிருக்கும் நிலையில், இத்தகைய வீழ்ச்சி எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

கிழக்கிலுள்ள 1042 பாடசாலைகளில் 40 தேசிய பாடசாலைகளும் மாகாண சபைகளின் கீழ் செயல்படும் சுமார் 1000 பாடசாலைகளில் சுமார் 3 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இதைவிடவும், சுமார் 30 ஆயிரம் ஆசிரியர்கள் பணியாற்றும் இந்தப் பாடசாலைகளில் ஒப்பீட்டளவில் குறைபாடுகளும் இல்லாமல் இல்லை.

ஆனால், இந்தக் குறைபாடுகள் தான் வீழ்ச்சிக்கு காரணமா? என்று கேட்டால் கேள்விக்குறிதான் பாய்ந்து நிற்கிறது. மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்குரிய மனநிலை ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும். பெரும்பாலான பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்த மனநிலையில் இருப்பதாக தெரியவில்லை.

மாகாணங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றங்களும் வளப்பங்கீடும் இந்த 1042 பாடசாலைகளிலும் பெரும் பிரச்சனையாகவே தொடர்கிறது. கல்முனையில் இருக்கின்ற ஒரு ஆசிரியை /ஆசிரியர் பொத்துவில்லுக்கும் கொக்கட்டிச்சோலைக்கும் திருகோணமலைக்கும் இடமாற்றம் செய்யப்படும் போது இவர்களின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை உயர் கல்வி நிர்வாக அதிகாரிகள் சிந்திப்பதாக தெரியவில்லை.

ஒரு பாடசாலையில் இஸ்லாம் / இந்து பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத போதும், இஸ்லாம் கற்பிக்க தகுதியுடைய ஆசிரியர் ஒருவர் இன்னும் ஒரு பாடசாலையில் மேலதிக ஆசிரியராக கடமையாற்றுகிறார். இதேபோல்தான் ஏனைய பாடசாலைகளுக்கும் இப்படி தடுமாறிய நிலை நிலவுகிறது.

இதுபோன்ற, நிர்வாக சிக்கல்களால் ஆசிரியர்களின் மனநிலையில் ஏற்படுத்தும் தாக்கம், மாணவர்களுக்கு திருப்தியான கல்வியை ஊட்டக் கூடியதாக இருக்காது.

மாகாண மட்டத்தில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாக கொள்ளமுடியும். நகர்ப்புற பாடசாலைகளுக்கும் கிராமப்புற பாடசாலைகளுக்கும் இடையில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் மாகாணக் கல்விச் சமநிலையை பொதுவாகப் பாதிக்கின்றன. உதாரணமாக, ஒரு சில நகர்ப்புற பாடசாலைகளில்,மேலதிக ஆசிரியர்கள் பணியாற்றும் போது, கிராமப்புறங்களில் இன்னும், வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதுவும் கல்வியின் அடைவு மட்டத்தை பாதிக்கும் என்பதில் நிர்வாக அதிகாரிகளும்,அதிபர்களும் புரிந்து கொள்வதாக தெரியவில்லை. கொரோனா வைரஸ் தாக்கம் உலகையே ஆட்டிப்படைக்கும் நிலையில் இலங்கையையும் உசுப்பி வருகின்றது. இது கிரமமான பாடசாலைக் கற்பித்தல் முறைமைக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, பெரும் சவாலாகவும் இருக்கிறது. பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டு zoom தொழில்நுட்பத்தின் ஊடாக கற்பித்தல் பணி தொடர்கிறது.

இதுவும் 'some think better than nothing' என்பது போல தான், ஒன்றும் இல்லாத நிலையில் zoom மூலமாவது கற்றல், கற்பித்தல், முறைமை முன்னெடுத்துச் செல்லப்படுகிறது என்பது திருப்திப் படக்கூடிய விடயம்தான்.

ஆனாலும்,மாணவர்களின் மனநிலையில் கொரோனா பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இது கிழக்குக்கு மட்டுமல்ல, ஏனைய

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

# கல்முனை தமிழர்களின் பூர்வீக தாயகம்!

**கல்முனை** தமிழர்களின் பூர்வீக வதிவிடத் தாயகம் என்பதனை யாராலும் மறுக்கவோ மறைக்கவோமுடியாத உண்மை. இந்த உண்மையை மறைக்கும் வகையில் முஸ்லிம் அரசியல்வாதிகளினதும் இனவாதத்தை தூண்டுபவர்களின்தும் செயற்பாடுகள் காணப்படுகின்றது.

கல்முனையில் 1989 ஆம் ஆண்டு முதல் வடக்குப் பிரதேச செயலகம் தரம் உயர்த்தக்கூடாது, கல்முனை முஸ்லிம்களின் தாயகம், இதில்வெளிமாவட்டத் தமிழர்கள் தலையிடக் கூடாது என்ற தொனியில் விபரமறியாத ஒருசில முஸ்லிம் அரசியல்வாதிகள் பள்ளிசம்மேளத்தலைவர்கள் கூறிவருவது கவலைக்குரியதும் வெறுப்புக்குரியதுமாகும்.

வெளி மாவட்டத் தமிழர்கள் குரல் கொடுத்தால் துவேசம்அ,தேவேளை வெளி மாவட்ட முஸ்லிம் தலைவர்கள் குரல் கொடுத்தால் அது தேவவாக்கா? இன்னும் ஒருவர் கூறுகின்றார் தங்களைக் கண்டால்மடித்துக்கட்டிய வேட்டியை அவிழ்த்து வணக்கம் சொல்லிய தமிழர்கள் இன்று வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு அடிக்க வருகின்றார்கள். இப்படியும் ஓர் ஏளனம். இவ்வாறு பலராலும் தங்கள்வாய்க்கு வந்த விதமாய் வசைபாடி இளம் சமுதாயத்தினர் மத்தியில் வெறுப்புணர்வைத்தூண்டுவதனால் உண்மை நிலையினை வெளிக் கொணர நினைத்து வரலாற்றினை தெளிவு படுத்தமுன்வந்துள்ளேன்.

## கல்முனையின் எல்லைகள்

கிழக்கு கடல்,மேற்கு - குளம், வயல், ஆறு, வடக்கு - பெரியநீலாவணை,தெற்கு தரவைக் கோயில் வீதி

**கல்முனை குறிச்சிகள் மூன்று இதன் கிராமத் தலைவர்கள் மூன்று தமிழர்கள்**

வணக்கஸ்தலங்கள்மு இந்துக் கோயில்கள் 12, கிறிஸ்தவ தேவாலயங்கள் 07, பௌத்த விகாரை 01 கல்வி நிலையங்கள் 01. உவெஸ்லி உயர்தர பாடசாலை 02. கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை இவையிரண்டும் 150 வருடங்களுக்கு முந்திய கிறிஸ்தவ பாடசாலைகள். இங்கு கற்பித்த ஆசிரியர்கள் தமிழர்கள் இங்கு சகல மதத்தவர்களும் கல்வி கற்று முன்னேறியவர்கள்.

## வைத்தியசாலை

150 வருடங்கள் பழமை வாய்ந்தது கல்முனை ஆதார வைத்தியசாலை. குருக்கள்மடம் தொடக்கம் பாணமை வரை சகல மக்களும் இங்கு சிகிச்சை பெற்றவர்கள்.

கரைவாகுப்பற்றின் வன்னிமைகள்

01. முதல் வன்னியர் திரு. செல்லையா 02. திரு.சின்னத்தம்பிப் போடி

03. திரு.சத்துருக்கப்போடி 04. ஜனாப்.கே.டி.மஜீத் ;05. ஜனாப். எம்.எஸ்.காரியப்பர்.

1946 - 1978 வரையிலுள்ள டி.ஆர்.ஓ(DRO) க்கள் 15 ,

இதில் தமிழர்கள் 05 சிங்களவர்கள் 10

இவர்களுடைய காரியாலயங்கள்

01. யோசப் காடியர் இல்லம் மணல்சேனை 02. கந்தவாசா கல்முனை

## சௌக்கிய சபை

கரைவாகுப்பற்றின் தலைநகரம் கல்முனை. 1897 02 19 இல் ஆரம்பம்.

பட்டின சபை - 1946 பட்டின சபையாக மாற்றமடையும் போது கல்முனைத் தமிழர்களுடன் அண்மிருந்த தமிழர்களைக்கொண்ட பாண்டிருப்பை இணையாது சதி செய்து கல்முனைக்குடியுடன் இணைத்து இணைக்கும்போது கல்முனைத் தமிழ்க் குறிச்சிகள் மூன்று எனவும் கல்முனைக்குடி முஸ்லிம் குறிச்சிகள் 05எனவும் வட்டாரங்களாக்கப்பட்டபோது கல்முனை 3ஆம் குறிச்சியை மாடரியார் வீதியின் தென்புறம் கல்முனைக்குடியுடன் இணைத்து 3ஆம் வட்டாரமாகவும் , வடபுறம் 2ஆம் குறிச்சியுடன் இணைத்து 2ஆம் வட்டாரமாகவும் பிரிக்கப்பட்டதால் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று குறைக்கப்பட்டது.

மட்டக்களப்பு கச்சேரி நிர்வாகத்தின் கீழ் இருக்கும் போது

கரைவாகுப்பற்றின் எல்லைகள்.




வடக்கே ஒந்தாச்சிமடம் , கோட்டைக்கல்லாறு எல்லை.தெற்கு சாய்ந்தமருது

1961 ஆம் ஆண்டில் அம்மாறை மாவட்டம் பிரியும்போது கரைவாகுப்பற்றுடன் இணைந்திருந்த தனித் தமிழர்களை உள்ளடக்கிய கிராமங்களான கோட்டைக்கல்லாறு, கல்லாறு ,துறைநீலாவணைஆகிய மூன்று கிராமங்களையும் பட்டிருப்புத் தொகுதியுடன் இணைத்ததனால் கல்முனைத்தொகுதியில் தமிழ் பிரதிநித்துவம் இல்லாது போனது.

இன சுத்திகரிப்பும் நில அபகரிப்பும்

1967 கல்முனை முதலாம் குறிச்சியில் அத்துமீறிய முஸ்லிம் குடியேற்றம் நிகழ்த்தப்படவிருந்தது. இதனை கல்முனை 1ஆம் குறிச்சியில் உள்ள தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததனால் ஏற்பட்டகலவரத்தை தொடர்ந்து கல்முனை 3இல் ஒரு தொகுதி முஸ்லிம்களால் தீயிடப்பட்டதனால் பலவீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது. அடுத்து பல நூற்றாண்டு காலமாக சாய்ந்தமருது முஸ்லிம் மக்களுடன் இணைந்து வாழ்ந்த தமிழ் மக்கள் துரத்தியடிக்கப்பட்டனர்.

இழப்புக்களும் , சாய்ந்தமருதும்.

01. ஒரு தமிழ் கிராம அதிகாரி02. இரண்டு கிராம சேவை உறுப்பினர்கள்

03. இந்துக் கோயில்கள்04. மெதடிஷ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை05. மயானம் (இந்து , கிறிஸ்தவ)

பிரதான வீதியில் அமைந்திருந்த ஐயனார் கோயில் அகற்றப்பட்டு பள்ளிவாசல் அமைக்கப்பட்டது.

அடுத்து பிரதான வீதியில் அமைந்திருந்த கதிரேசன் கோயில் அழிக்கப்பட்டு வர்த்தக நிலையம்அமைக்கப்பட்டது. தொடர்ந்து விஷ்ணு கோயில் அழிக்கப்பட்டு சாஹிராக் கல்லூரி அமைக்கப்பட்டது.

மெதடிஷ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இருந்த இடத்தில் பாலிகா மகளிர் வித்தியாலயம்அமைக்கப்பட்டது. தமிழர்களுக்கான மயானம் இருந்த இடத்தில் முஸ்லிம் மக்கள்


குஞ்சுதம்பி ஏகாம்பரம்

குடியேறி வீடுகள்அமைத்து இன்று சொர்கா புரி போல் அந்த இடம் காட்சியளிக்கின்றது.

**கல்முனை தமிழ் பகுதியில் முஸ்லிம் தலைவர்களின் அதிகார துஸ்பிரயோகம்**

01. இராசவாச கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர்

இவர்களது காலத்தில் சந்தாங்கேணி குளத்தின் பிரதான வீதியை அண்டிய பகுதியும் சந்தை வீதிவரை நானூறுக்கும் மேற்பட்ட கடைகள ; வர்த்தக நோக்கத்திற்காக முஸ்லிம் மக்களுக்குவழங்கப்பட்டது.

02. ஜனாப். எம்.சி.அஹமட்

இவர் காலத்தில் பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து தரவைக்கோயில் வரை தாளையடிக்குளம் சுவீகரிக்கப்பட்டு 272 கடைத்தொகுதிகள் அமைக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டது.

03. ஜனாப்.ஏ.ஆர்.மன்சூர்

இலர் காலத்தில் தமிழர் ஒருவருக்கு சொந்தமான காணி சுவீகரிக்கப்பட்டு தொழில் தொடர்புநிலையம் , நீதி மன்றங்களின தொகுதிக் கட்டிடங்கள் , குடிநீர்த்தாங்கி இவைகள்அமைக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் முஸ்லிம் மக்களைக்குடியேற்றியது.

04. பேரியல் அஷ்ரஃப்

அவர் வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் கல்முனை முதலாம் குறிச்சியில் தமிழர்களின் பிரதேசத்திற்குள் வெளிநாட்டில் இருந்து ஒரு தமிழ் கோடீஸ்வரனின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட144 வதிவிடங்களைக் கொண்ட இஸ்லாமாபாத் தொடர்மாடிக் கட்டிடங்கள் ஒரே இரவில் முஸ்லிம்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

05. ஜனாப் . மயோன் முஸ்தபா

இவர் அமைச்சராக இருந்த காலத்தில் கல்முனை புதிய நகர அபிவிருத்திக்காக வயல் நிலங்கள் 250 ஏக்கர் நெற்செய்கைக் காணிகள் சுவீகரிக்கப்பட்டு வெளி மாவட்ட மாவட்ட முஸ்லிம்கள் பாரியதொழிற்பேட்டை, வர்த்தக நிலையங்கள் குடியேற்றம் போன்ற சதித்திட்டத்தை அறிந்த நாங்கள் விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்களுடன் ( கருணா அம்மான்) தொடர்பு கொள்ள அவர் அன்று இருந்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிடம் எங்களை அழைத்துச் சென்று உண்மை நிலையினை விளங்க வைக்க அவர் உடனே தடை உத்தரவைப் பிறப்பித்தார். இதனால் அவர்களின் திட்டத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டது.

இழந்தவைகள் இழந்தவையாக இருந்தாலும் இருப்பவைகளை காப்பாற்றி இணைந்து வாழ தமிழ் மக்கள் விரும்புகின்றோம். தவறும் பட்சத்தில் தமிழர்கள் தப்பிப்பிழைக்க வேறு வழிமுறைகளைவிரைவில் கையாள நேரிடும் என்பதனை வேதனையுடன் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

குஞ்சுதம்பி ஏகாம்பரம்

# இடர்நிலை நீங்கும் வரை நிகழ்நிலை வகுப்புகள் வேண்டும்

## ஓய்வுநிலை மேலதிக கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் மனோகரன்





கொவிட் 19 இடர்நிலை நீங்கும்வரைக்கும் நிகழ்நிலை வகுப்புகளை விரிவுபடுத்தவேண்டும். இதற்கான வசதிவாய்ப்புகள் இல்லாத மாணவர்க்கு அவற்றை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும் என்று கிழக்குமாகாணகல்வித்திணைக்களத்தின் ஓய்வு நிலை மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் சின்னதம்பி மனோகரன் கூறுகிறார்.

மட்டக்களப்பின் பழந்தமிழ்கிராமமாம் செட்டிபாளையத்தைச்சேர்ந்த திரு.சி.மனோகரன் 34வருட காலம் கல்விச்சேவையிலிருந்தவர். 15வருடங்கள் ஆசிரியசேவையிலும் ,19வருடங்கள் கல்விநிருவாகசேவையிலும் சிறந்துவிளங்கியவர். 1983களில் பேராதனைப்பல்கலைக்கழகத்தில், கலைத்துறையில் பொருளியல்பாடத்தில் சிறப்புவிசேட பட்டம் 2ஆம் நிலையில் பெற்ற மதியூகி. கல்வி மற்றும் சமுகவியல்துறையில் இருவேறு முதுமாணிப்பட்டங்கள் பெற்ற முதலாந்தரகல்வி நிருவாகி.

1987இல் மட். சிவானந்தா வித்தியாலயத்தில் பொருளியல் ஆசிரியராகப்பணியாற்றிய அவர் 1999இல் கல்விநிருவாகசேவையில் சேர்ந்தார். பட்டிருப்புவலயத்தில் பிரதிக்கல்விப்பணிப்பாளராக இருந்து ,பின்னர் கிழக்குமாகாணக்கல்வித்திணைக்களத்தில் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராக 2018டிசம்பர் வரை சேவையாற்றியவர்.

கல்முனைநெற்றின் 16வது வாராந்த மின்னிதழுக்காக அவரிடம் கலந்துரையாடியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரிடம் கண்ட செவ்வியை இங்கு தருகிறோம்.

**Q இம்முறை வெளிவந்த க.பொ.த.உயர்தர பபீட்சை முடிவுகளின் மாகாணதர வரிசைப்படுத்தலில் கிழக்கு மாகாணம் இறுதியில் உள்ளது. கல்வியியலாளர் என்ற வகையில் இவ் வீழ்ச்சிக்கான காரணம் என்ன என்று நம்புகின்றீர்கள்?**

2019 க.பொ.த. உயர்தரப்பெறுபேற்றின் அடிப்படையில் எமது கிழக்கு மாகாணம் 4வது ஸ்தானத்திலிருந்தது. ஆனால் அது 2020இல் 9ஆவது அதாவது இறுதிநிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

இம்முறை வெளிவந்த பெறுபேற்றில் அனைத்துப் பாடங்களிலும் சித்திபெறாதவர்கள் மேலும் ஒரு பாடம் இருபாடங்கள் சித்திபெற்றவர்களின் தொகை

**தரம் 1 இல் தமிழ் மாணவர் சேர்வில் வீழ்ச்சி என்பது அபாயகரமானது**

கடந்தவருடத்தைவிட அதிகமாக உள்ளது.இதைவிட மெரிட் சித்தி பெற்றவர்களின் தொகையும் வெகுவாகக்குறைந்துள்ளது. இதன்காரணமாக இவ்வரிசை நிலை பின்தள்ளப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவான காரணங்களாக பின்வருவனற்றைக்குறிப்பிடலாம்.

பொதுவாக தமிழ் மாணவர்களின் கற்றலிலுள்ள ஆர்வம் குறைவடைந்துள்ளது. குறிப்பாக சுயகற்றலில் எமது மாணவரின் ஆர்வம் மிகவும் குறைவாக உள்ளது.

இதற்கு கொவிட்19ஜத் தொடர்ந்து பாடசாலைகள் மூடப்பட்டதும், தனியார் வகுப்புகள் மூடப்பட்டதும், அதாவது கற்றலுக்கான உவப்பான சூழல் இழக்கப்பட்டதும் ஒரு காரணமாகக்கொள்ளலாம்.

ஏனைய பிரதேசங்களை விட தமிழ்ப்பிரதேசங்களில் சுகாதாரபாதுகாப்பு நடைமுறைகள், சட்ட திட்டங்களுடன் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டன. இதனால் மாணவர்களுக்கான குறைநிரப்பு கற்றல் கற்பித்தல் வாய்ப்புகள் மறுக்கப்பட்டன.

அதை நான்இங்கு ஏன் சொல்கிறேன் என்றால் கிழக்கில் ஏனைய முஸ்லிம் மாணவர்களின் பெறுபேற்றுடன் ஒப்பிடுகையில் தமிழ்மாணவரின் பெறுபேறு வெகுவாகக்குறைவடைந்துள்ளதைக் காணலாம்.

**தமிழ் மாணவர் சுயகற்றலில் ஆர்வம் மிகவும் குறைவு**

அடுத்ததாக வலயக்கல்விப்பணிமனை அல்லது மாகாணக்கல்விப்பணிமனையால் கொவிட் 19 இடர்நிலையால் பாதிக்கப்பட்ட பாடப்பகுதிகளை நிரப்ப உரிய கற்றல்கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படாதமையைக்குறிப்பிடலாம்.

மேற்படி இரு அலுவலகங்களும் ஒரு இலக்கினை அடிப்படையாகக்கொண்ட எந்தவித நிகழ்ச்சித்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.இதனால் மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படவில்லை:மாதிரி வினாத்தாள் வகுப்புகள் நடாத்தப்படவில்லை:அவர்களுக்கான குறைநிரப்புக்கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை: வினா விடை வகுப்புகள் நடாத்தப்படவில்லை:சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.இதன் காரணமாகவும் பெறுபேற்றில் வீழ்ச்சி காணப்பட்டது என்று கூறலாம்.

முன்னரிருந்த மாகாணகல்விப்பணிப்பாளருடைய காலத்திலே இலக்கினை அடிப்படையாகக்கொண்டு அதிகளவில் கல்விச்செயற்பாடுகள் இடம்பெற்றன. அவர் அந்த செயற்பாட்டினை மேற்கொள்பவர்களுக்கான ஊக்கவிப்பினை கூடியளவில் வழங்கியிருந்தார். அது பின்னர் இல்லாமல் போய்விட்டது.

நிகழ்நிலை வகுப்புகள் என்று சில செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது எல்லா மாணவர்களையும் சென்றடையவில்லை. அதற்கான காரணம் எல்லா மாணவரிடமும் அதற்கான வசதிவாய்ப்புகள் இல்லாமை. குறிப்பாக பின்தங்கிய கிராமப்புற மாணவரிடம் அல்லது வசதிகுறைந்த மாணவரிடம் இல்லாமை.

மற்றது கற்பிக்கின்ற ஆசிரியது மனப்பாங்கு இதுவிடயத்தில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதாக நான் கருதுகின்றேன்.அதாவது தன்னிடம் பயில்கின்ற மாணவர்கள் நல்ல உயர்ந்த பெறுபேற்றைப்பெறவேண்டும் என்ற நோக்குடன் அர்ப்பணிப்பான சேவையை இந்த கொவிட் காலத்திலே மேற்கொள்ளவில்லை. ஏதோ மாணவர்கள் சுயமாகக்கற்று பெறுபேற்றைப்பெற்றுக்கொள்வார்கள் என்ற மனப்பாங்கில் போதியளவு கவனம் செலுத்தாமையும் பெறுபேறு வீழ்ச்சியடைந்தமைக்கான மற்றுமொரு காரணமெனலாம்.

**Q இதனை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர என்னவகையான உத்திகளைக் கையாளலாம்?**

கொவிட் 19 இடர்நிலை நீங்கும்வரை நிகழ்நிலை வகுப்புகளை விரிவுபடுத்தவேண்டும். இதற்கான வசதிவாய்ப்புகள் இல்லாத மாணவர்க்கு அவற்றை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும்.அந்த குறிப்பிட்ட பிரதேசத்திலிருக்கின்ற பாடத்துறை சார்ந்த ஆசிரியர்களைக்கொண்டு சகல பாடங்களுக்கும் பொதுப் பரீட்சை வினாத்தாள்களை மையமாகக்கொண்டு அலகுப்பரீட்சை நடாத்துதல்.இதன்மூலம் மாணவர்க்கு கடினமான பாடஅலகுகள் அல்லது விடயங்களை இனங்கண்டு அதற்கேற்ப பரிகார நடவடிக்கைகள் அல்லது பின்னூட்டல்களை வழங்குதல். மாணவர்கள் எந்த அலகில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள்? என்பதையறிந்து அதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதனூடாக இந்தப் பெறுபேற்றை அதிகரிக்கலாம். இன்றைய பிள்ளைகளிடம் சுயகற்றலில் ஈடுபடுகின்ற தன்மை குறைவடைந்துள்ளது. பாடசாலைக்குச்செல்வது பிரத்தியேகக் கல்விநிலையங்களுக்கச்செல்வது என்பதற்கப்பால் அங்கு கற்கின்ற விடயங்களை தாமாக சுயமாகக்கற்று தெளிவுபெறுகின்ற பாங்கு இன்று மாணவரிடத்தில் அருகிவிட்டது.

எனவே பெற்றொர்கள் வீட்டில் சுயகற்றலை மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.மாதிரிவினாத்தாள்களுக்கு விடைகளைத்தயார்படுத்தும்வகையில் அந்தசுயகற்றல் ஊக்குவிக்கப்படவேண்டும்.

மாணவர்களை மிகவும் சிறியகுழுக்களாகப் பிரித்து கிராமிய அடிப்படையில் ஒன்றிணைத்து அங்குள்ள ஆசிரியர்களின் வழிகாட்டலில் பாடவாரியாகக் கலந்துரையாடல் முறையில் அவர்களது சந்தேகங்களை தீர்த்துவைத்தல். இதற்கு கொவிட் விதிமுறைகளை மீறாதவகையில் சுகாதாரத்துறையினரின் ஆதரவோடு மேற்கொள்ளல்.

மாகாணகல்வித்திணைக்கள வழிகாட்டலில் வலயக்கல்விப்பணிமனைகள் இடர்கால கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும்.பாடவிடயங்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் மாணவர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடியவகையில் குறிப்புகளாக வழங்குதல். இந்த நிகழ்நிலை வகுப்புகளோடு சேர்த்து இதனை வழங்கலாம்.பயிற்சிப்பரீட்சைகளுக்கான வினாப்பத்திரங்களை தயாரித்து வழங்குதல்.அவர்கள் வீட்டிலிருந்தே செய்யக்கூடிய வகையில் இவ்வினாப்பத்திரங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

அந்தந்த பிரதேசமட்ட ஆசிரியர்களின் உதவியோடு இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல்.

**Q கிழக்கில் உள்ள தமிழ்பாடசாலைகளில் தமிழ்மாணவர்கள் முதலாம் வகுப்பில் சேர்வது குறைவு என்று தரவுகள் கூறுகின்றன. இதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

இது உண்மைதான்.இதற்கான காரணங்களாக பின்வருவனற்றைக்குறிப்பிடலாம்.

தமிழச்சமுதாயத்தில் பிறப்புவீதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி. பொதுவாக தமிழ்ப்பெற்றோர்கள் ஒன்றிரண்டு பிள்ளைகளோடு நிறுத்திக்கொள்கிறார்கள்.இது கூடுதலாக கற்றறிந்த அல்லது வசதியான குடும்பங்களில் இவ்வாறான நிலை காணப்படுகின்றது.அப்படி இருப்பதைத்தான் மற்றவர்களும் நல்லது எனக்கருதும் மனப்பாங்கும் நிலவுகிறது. ஆக பிறப்புவீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி தரம் 1அனுமதியில் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளது என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை. இந்த நிலைமை முஸ்லிம் சமுகத்தோடு ஒப்பிடுகையில் மாறுபட்டதாக உள்ளது.

**தமிழ்ப் பிரதேசங்களில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் இறுக்கம்**



வடக்கு கிழக்கு பகுதியில் ஏற்பட்ட யுத்தம் மற்றது சுனாமி மற்றும் பெற்றோர்கள் இழக்கப்பட்டமை பல்வேறு காரணங்களால் பிரிவுகள் ஏற்படுவது போன்றவற்றால் குழந்தைகள் பிறக்கின்றவீதம் குறைகின்றன.

குழந்தைகள் பிறப்பதற்கான கருவளம்கூடிய காலத்தில் பெற்றொர்கள் வெளிநாடு செல்வது. அங்கிருந்து வயதுசென்று வந்தபின்பு பிள்ளைகள் பெறுவதற்கான வாய்ப்பு குறைவு.

இதைவிட தமிழர்களுடைய இனவிகிதாசாரத்தை திட்டமிட்டு குறைக்கும்வகையில் தமிழ்க்குடும்பங்கள்மீது திணிக்கப்படுகின்ற குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் சில பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பிள்ளைகள் கூடுதலாகப்பெற்றால் வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும் என்ற மனோநிலை தமிழர்கள் மத்தியிலே கூடுதலாக காணப்படுகின்றது.

இவற்றால் பிறப்புவீதம் குறைந்து முதலாம்வகுப்பில் மாணவர் சேரும் வீதம் குறைவடைந்துள்ளது. இதனால் குறைந்த மாணவர்களைக்கொண்ட பாடசாலைகளை மூடவேண்டிய அபாயகரமான சூழல் ஏற்படவாய்ப்புண்டு. அதுமட்டுமல்ல தமிழர்களின் இனவிகிதாசாரம் ,இருப்பு எல்லாம் கேள்விக்குறியாக்கப்படும்.

எனவே இதுவொரு அபாயகரமான நிலைமை. இதனைத்தவிர்ப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தினாலன்றி நிலைமை விபரீதமாகலாம்.

**Q பிறப்புவீதத்தை அதிகரிக்க என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்?**

தமிழ் இளம்பெற்றோர் மத்தியில் பிள்ளைகள் பெறுவதற்கான நல்ல ஊக்குவிப்பு விழிப்புணர்வுகளை கிராமம் கிராமமாக பிரதேசம் பிரதேசமாக வழங்குதல் வேண்டும்.

வறியநிலையிலுள்ளவர்களுக்கு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதனூடாக பிள்ளைகள் பெறுவதற்கான ஆலோசனைகளை வழங்கலாம். ஊக்குவிப்புகளை மேற்கொள்ளலாம்.உண்மையில் அவர்களது வருமானம் அதிகரிக்கின்ற பட்சத்தில் பிள்ளைகள் பெறுவதற்கு முன்வருவார்கள்.

எமது சமுகத்தில் கூடிய பிள்ளைகளைப்பெறுகின்ற குடும்பத்தை குறைத்து மதிப்பிடுகின்ற ஒரு துர்ப்பாக்கியநிலை நிலவுகின்றது. அவர்களுக்கு ஒன்றும் தெரியாது, படிக்காதவர்கள் என்று கருதும் எண்ணப்பாடு . இந்த நிலையை நீக்குதல். இதுதொடர்பாக இளையோர் மத்தியில் நல்லதொரு கருத்தாடல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இதன்மூலம்தான் தரம்1இல் சேரும் மாணவர் வீதத்தை அதிகரிக்கமுடியும்.இல்லாவிட்டால் தமிழ்ப்பாடசாலைகள் மூடப்படவேண்டிய நிலை, தமிழ்மக்களின் இனவிகிதாசார நிலை அரசியல் இருப்பு அனைத்துமே கேள்விக்குறியாகும். இது அபாயகரமானதொரு நிலை என்பதையும் பதிவிடுகிறேன்.

**Q அரசியல் கல்வித்துறையிலும் வியாபித்துள்ளது. அந்தவகையில் தங்களுக்கு சமகால தமிழ் அரசியல் தலைவர்களின் போக்கில் நம்பிக்கை உள்ளதா?**

பெருமளவில் நம்பிக்கை இல்லை என்றே கூறுவேன். ஏனென்றால் எமது தமிழ்அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் பல்வேறு கட்சிகள், குழுக்கள் எனப் பிரிந்து நிற்பது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறது.குரல் கொடுப்பது மட்டுமல்ல தான்சார்ந்த இனத்திற்கு எதையாவது பெற்றுக்கொடுக்கவேண்டும்.அதைக் காணவில்லை. பொதுவாக ஒற்றுமையின்மை.இதன் மூலம் ஒருவரையொருவர் விமர்சிப்பதும், குறைசொல்வதும் அவர்கள் மீதான நம்பிக்கையீனத்தை கூட்ட ஏதுவாக அமைகின்றது.

இவ்வாறு அவர்கள் பிரிந்து செயற்படுவதன் காரணமாக தமிழ்மக்களின் பலம், இருப்பு என்பன கேள்விகுறியாகஉள்ளது. இதனால் நடுநிலை பொது நோக்குடையவர்கள் மத்தியில் இவர்கள் பற்றிய நம்பிக்கையீனம் அதிகரிக்கிறது.எனவே இவர்கள் பொதுநோக்குடன் சமுகநோக்குடன் ஒற்றுமையாகச் செயற்படுவதனூடாக நம்பிக்கையை கட்டியெழுப்பலாம் என்று நம்புகிறேன்.

நேர்கண்டவர்: வேதசகா

கல்முனை விவகாரம்;

# இரு சமூக தலைவர்களும் பேசி தீர்வினைக்காண முன்வரவேண்டும்!



**ஓய்வுபெற்ற பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் முக்தார் கூறுகிறார்**

**கல்முனை** வடக்கு பிரதேச செயலக விடயத்தை தமிழ் தரப்பும் முஸ்லிம் தரப்பும் தங்களின் அரசியலுக்காக பயன்படுத்துகின்றார்களே தவிர மக்களுக்கு தீர்வை பெறுவதில் இரண்டு தரப்பும் பிழை விடுகின்றார்கள்.இதற்கு இரு சமூக மக்களும் இனியும் இடமளிக்க கூடாது.இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் சண்டை பிடித்து அரசியல் செய்வதற்கு இடமளியாது இரண்டு சமூகத்திலும் உள்ள அரசியல் கலப்பில்லாத சமூக நல்லிணக்கம் உள்ள புத்திஜீவிகள் முன்வந்து பேசி முடிவுக்கு வந்து இந்த தீர்வினைதான் நீங்கள் செய்து தரவேண்டும் என தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கூறவேண்டும்.

இவ்வாறு ஓய்வுபெற்ற பிரதி வலயக் கல்விப்பணிப்பாளரும் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளருமான ஏ.எல்.முஹம்மட் முக்தார் ( இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு I ) கூறினார்.

கல்முனைநெற்றின் 16வது வாராந்த மின்னிதழுக்காக அவரிடம் கலந்துரையாடியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரிடம் கண்ட செவ்வியை இங்கு தருகிறோம்.

**Q கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்வு விடயம் அந்த நிருவாக எல்லைக்குட்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கை என்பது வெளிப்படை ஆனால் அதற்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டை போடப்படுவது தொடர்பாக உங்கள் கருத்து ?**

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை தமிழ் தரப்பும் முஸ்லிம் தரப்பும் தங்களின் அரசியலுக்காக பயன்படுத்துகின்றார்களே தவிர மக்களுக்கு தீர்வை பெறுவதில் இரண்டு தரப்பும் பிழை விடுகின்றார்கள்.

இது நிருவாக பிரச்சனை ஆட்சி பிடிக்கும் பிரச்சனை இல்லை. வவுனியாவில் எல்லை இல்லாத வகையில் சிங்கள கிராமங்களை உள்ளடக்கி பிரதேச செயலகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது அவ்வாறு ஒரு முறையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் உருவாக்கப்படலாம். ஏன் என்றால் இங்கு கல்முனை நகரத்தை வைத்தே பிரச்சனை இழுபறியில் உள்ளது. மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் போன்று நிலத்தொடர்பற்ற செயலகமாக தீர்வைக்காண இரு தரப்பும் முன்வந்து பேசவேண்டும்.

இரு தரப்புக்குள்ளும் சந்தேகம் உள்ளது கல்முனை நகரத்தை தமிழர்கள் பறித்துவிடுவார்கள் வியாபாரம் செய்து வருகின்ற நகரம் பறிபோய்விடும் என முஸ்லிம்கள் அஞ்சுகின்றார்கள். கல்முனை வாடிவீட்டு வீதி சந்திக்கு வடக்கு பக்கம் அதிகமான வர்த்தக நிலையங்கள் தமிழர்களுடையது தெற்கு பக்கம் அதிகமானவை முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களாக உள்ளன. இதனை இரண்டு தரப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டும் இந்த மனப்பாங்கு இரண்டு சமூகங்களுக்குள்ளும் வரவேண்டும்.

அரசியல்வாதிகள் சொல்வது போன்று கல்முனை பறிபோய்விடும் என்பதும் கல்முனை எங்களுடையது என்பதும் இல்லை இங்கு அரசியல் அதிகாரம் பிரச்சனையல்ல மக்களின் நிருவாக சேவையே இங்குள்ள விடயம்.இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் சண்டை பிடித்து அரசியல் செய்வதற்கு இடமளியாது இரண்டு சமூகத்திலும் உள்ள அரசியல் கலப்பில்லாத சமூக நல்லிணக்கம் உள்ள புத்திஜீவிகள் முன்வந்து பேசி முடிவுக்கு வந்து இந்த தீர்வினைதான் நீங்கள் செய்து தரவேண்டும் என தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கூறவேண்டும்.

முப்பது வருடங்களாக இதனை வைத்து இரண்டு தரப்பு அரசியல்வாதிகளும் அரசியல் செய்து வருகின்றார்கள். இதற்கு இரு சமூக மக்களும் இனியும் இடமளிக்க கூடாது தமிழ் அரசியல்வாதிகளுக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் உள்ளதா? என்ற சந்தேகமும் உள்ளது. இரா சம்பந்தன் அவர்களும் றவூப் ஹாக்கீம் அவர்களும் இந்த விடயத்தில் பேசி தீர்த்திருக்கலாம் அந்த சந்தர்ப்பமும் தவறவிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை வைத்து நாடாளுமன்றத்தில் தேவையில்லாத விடயம் எல்லாம் இருதரப்பாலும் பேசப்படுகின்றது இது அந்தளவுக்கு போக வேண்டியதல்ல இரண்டு சமூகமும் சேர்ந்து பேசி தீர்க்க வேண்டிய விடயம்.

**Q இறுதியாக நடைபெற்று முடிந்த உயர்தரப்பபீட்சை முடிகளின் படி கிழக்கு மாகாணம் இறுதி இடத்தில் உள்ளது இந் நிலைமைக்கு காரணம் என்ன?**

பரீட்சை பெறுபேற்றின் புள்ளிவிபரப்படி இந்த பின்னடைவு ஏற்பட்டுள்ளமைக்கு பல காரணங்கள் உள்ளன அவற்றை ஆராய்ந்து சீர் செய்வதற்கான வழிகளை தேட வேண்டும். எடுத்த எடுப்பில் மாகாண கல்விப்பணிப்பாளர் மீது முழுமையான குற்றத்தை சுமத்துவது தவறு. மாகாண பணிப்பாளருக்கும் பரீட்சை முடிவுக்கும் நேரடியான சம்மந்தம் இல்லை.

இதற்கான நேரடி பொறுப்புக்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களும் பாட ரீதியான உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களும் ஏற்க வேண்டும். கிழக்கு மாகாண கல்விப்பணிமனையின் கீழ் 17 வலயங்கள் உள்ளன மாணவர்களை பாடசாலை கல்வி மீது நம்பிக்கையூட்டவைக்க வேண்டும் அவ்வாறான செயற்பாடுகளில் திணைக்களமும் பாடசாலைகளும் ஈடுபடவேண்டும். உயர்தர வகுப்பு மாணவர்கள் பிரேத்தியேக வகுப்புக்களில் (ரியுசன்) நம்பிக்கை வைத்ததன் விளைவுதான் இது.

வலயங்களில் உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் உயர்தர வகுப்பு மேற்பார்வைகளில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். உயர்தர வகுப்பின் ஒவ்வொரு பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற மேற்பார்வையாளர்கள் வலயங்களில் இல்லாமையும் காரணமாகும்.

அடுத்தது மாகாண கல்வித்திணைக்களத்தின் மேற்பார்வை அதிகம் இருக்க வேண்டும் வெளிவாரி மதிப்பீட்டை அந்த அந்த வலய அதிகாரிகள் செய்யாது வேறு வலய அதிகாரிகள் மாறி மாறி மதிப்பீடுகள் செய்ய வேண்டும் அப்போதுதான் உண்மையான மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கும்.

**Q சாய்ந்தமருது நகரசபை முன்னெடுப்பு தற்போது என்ன நிலையில் உள்ளது?**

சாய்ந்தமருது நகரசபை கோரிக்கையை வென்றெடுக்க மக்கள் சாய்ந்தமருது பள்ளிவாயலை ஒரு பொது நிறுவனமாக முன்வைத்து ஒன்றிணைந்து முன்வந்திருந்தார்கள். பின்னாளில் அது அரசியல் மயப்படுத்தப்பட்டதால் அது வலுவிழந்து விட்டது. நகரசபை ஒரு அரசியல்வாதியால் தான் பெற்றுத்தரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது அவ்வாறு அல்லாமல் மக்களை உங்கள் விருப்பத்திற்கு வாக்களியுங்கள் என்று கூறியிருக்கலாம்.

ஹரீஸ் எம்பிக்கு சாய்ந்தமருது நகரசபையை பெற்றுக்கொடுப்பதில் எந்தவித அக்கறையும் இல்லை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கும் முட்டுக்கட்டை போட்டு சாய்ந்தமருது நகரசபைக்கும் முட்டுக்கட்டை போட்டு கல்முனை அபிவிருத்தியை வீணாக்கிவிட்டார்.

சாய்தமருது நகரசபை உருவாக்கத்திற்கு ஒரு வர்த்தமானி வெளியிடப்பட்டு 24 மணி நேரத்தில் றத்துச் செய்யப்பட்டிருந்தது இதற்கு பின்னால் ஒரு மோசடி நடந்திருக்கலாம். மக்களின் வாக்குகளை கவர பாரிய ஒரு மோசடி நடந்திருக்கும் எனலாம் சாய்தமருது மக்களை ஏமாற்றிவிட்டார்கள். ஹரீஸ் எம்பி 20 க்கு கை உயர்த்தியது சாய்ந்தமருதுக்கு நகரசபை வழங்ககூடாது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயரக்கூடாது என்று.

சாய்ந்தமருது கோரிக்கை தற்போது வலுவிழக்கப்பட்டு உள்ளமைக்கு இங்கு தோடம்பழத்தில் வெற்றி பெற்ற ஒன்பது மாநகரசபை உறுப்பினர்களும் காரணம்தான் தனித்துவமாக இயங்காமல் அவர்களும் ஒரு அரசியல் கட்சியுடன் சேர்ந்துள்ளார்கள். ஆனால் மக்கள் இவர்களுக்கு கொடுத்த ஆணை நகரசபை கோரிக்கையை வெல்வதற்காக தனித்துவமாக இயங்க வேண்டும் என்று ஆனால் அவர்கள் அப்படி செயற்படவில்லை. கல்முனை மாநகரசபை கலைக்கப்படும் போது புதிய நகரசபை உருவாக்கப்படும் என வர்தத்மானியில் குறிப்பிடப்பட்டிருந்தது அப்போது பார்ப்போம் அதுவரை இதன் நிலைமையை கூற முடியாதுள்ளது.

சாய்தமருது மக்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும் இதுவே எல்லோரின் ஆதங்கம்.

**Q கல்முனை மாநகரசபையின் சேவைகள் எவ்வாறு உள்ளது உங்கள் கருத்து ?**

சாய்ந்தமருதில் உள்ள உறுப்பினர் ஒன்பது பேரும் ஆதரவளித்தாலும் ஆளும் கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் பார்வையில் எதிர்கட்சியாகவே உள்ளார்கள் மேயருக்கு சாய்ந்தமருதுக்கு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் ஹரீஸ் எம்.பி அதனை ஏதும் சொல்லி சொல்லி மாற்றுகிறாரோ தெரியாது.

மாநகரசபையினால் திண்மக்கழிவகற்றல் மின் விளக்குகள் பொருத்துதல் இடம் பெறுகின்றமையை இல்லை என்று சொல்லமுடியாது ஆனால் தேவையான அளவு காணாது.

கல்முனை மாநகர சபையில் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் தான் முக்கிய பொறுப்புக்களில் உள்ளனர் இது மாற்றப்பட வேண்டும். உதரணமாக மேயர் ஆணையாளர் கணக்காளர் மருதமுனையை சேர்ந்தவர்கள் பகுதி பொறுப்பாளர்களும் பலர் இப்படி உள்ளபோது எப்படி வெளிப்படை தன்மை இருக்கும் என்ற கேள்வி எழுவதில் நியாயம் உண்டு பல சந்தேகங்களும் வரலாம்.

ஆகவே முக்கிய நிருவாக பொறுப்பில் உள்ளவர்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் இல்லாமல் மாநகர எல்லைக்கு வெளியில் உள்ளவர்களும் நியமிக்கப்பட வேண்டும் இது முறைகேடுகளையும் சந்தேகங்களையும் தவிர்த்துக்கொள்ளும்.

**ஹரீஸ் எம்பிக்கு சாய்ந்தமருது நகரசபையை பெற்றுக்கொடுப்பதில் எந்தவித அக்கறையும் இல்லை. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கும் முட்டுக்கட்டை போட்டு கல்முனை அபிவிருத்தியை வீணாக்கிவிட்டார்**

**நேர்காணல்:-புவிநேசராசா கேதீஸ்-**

# இந்தியாவில் தொடரும் கொரோனா துயரம்!

## கங்கை கரையில் புதைக்கப்பட்ட 300 சடலங்கள்; அதிர்ச்சியில் மக்கள்



இந்தியாவின் கங்கை கரையில் 300க்கும் மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பது, அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனாவின் இரண்டாவது அலை காரணமாக, இந்தியாவில் மக்கள் கொத்து கொத்தாக பலியாகி வருவதால், நாடு முழுவதும் மயானங்களில் சடலங்களை எரியூட்ட இடமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.பல மாநிலங்களில் மயானத்தின் வாசலில் மணிக்கணக்கில் சடலங்கள் வரிசையில் காத்திருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன் உத்தரப்பிரதேசத்தின் எல்லையை ஒட்டிய, பீகாரின் பக்சர் மாவட்டத்திலும், உத்தரப்பிரதேசத்தின் காஜிபூர் மாவட்டத்திலும் கங்கை நதிக் கரையில் நூற்றுக்கணக்கான சடலங்கள் மிதந்தது தொடர்பான வீடியோ வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இவ்வாறு புதைக்கப்படும் சடலங்களை நாய்கள் தோண்டி கடித்து குதறி வரும் சம்பவங்களும் அரங்கேறுகின்றன. இனி அங்கும் சடலங்களை புதைக்க முடியாத அளவுக்கு முழு கரையும் நிரம்பி உள்ளது.

# இந்தியாவில் கங்கை ஆற்றில் வீசப்படும் சடலங்கள்



வடக்கு இந்தியாவின் இரண்டு எல்லை மாநிலங்களில் கங்கை ஆற்றின் கரையில் இருந்து டஜன் கணக்கான உடல்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலங்கள் கோவிட் 19 தொற்று நோயாளர்களுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்தியாவில் கோவிட் தொற்றின் இரண்டாவது அலை வேகமாக பரவி வரும் நிலையில்,

நாளாந்தம் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. நேற்றைய தினம் வட இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் கங்கை ஆற்றில் 100 சடலங்கள் மிதந்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பீகார் மாநிலத்தில், சவுசா கிராமத்தில் இதேபோன்று திங்களன்று ஆற்றில் இருந்து 40 க்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற தகனங்களில் எந்த கோவிட் நெறிமுறைகளும் இல்லாத நிலையில், சடலங்கள் தண்ணீரில் வீசப்பட்டால் இறந்தவர்களின் மூலம் தொற்று மேலும் பரவக்கூடும் என்ற அச்சம் உள்ளது.

# தமிழகத்தில் பொது வெளியில் ரெம்டெசிவிர் மருந்து விற்பனை



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு 'ரெம்டெசிவிர்' மருந்தை வைத்தியர்கள் பரிந்துரைத்து வருகின்றனர். கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் நோயாளிகளின் உறவினர்கள் மருந்தை தேடி அலைந்தனர். கறுப்பு சந்தைகளிலும் மூலம் அதிக விலைக்கு விற்கப்பட்டும் வந்தன.

இதனால் மக்கள் நலன் கருதியும் கூட்டங்களை கட்டுப்படுத்தும் வகையிலும் தமிழக மருத்துவ துறை அரச மருத்துவ கல்லூரி வளாகத்திலும் மேலும் சில பொது இடங்களிலும் 'ரெம்டெசிவிர்' மருந்து விற்பனை செய்யப்படுகிறது.



## வாரம் ஒரு படைப்பாளி

*இப்பத்தி இவ்வாரம் திருமலை மாவட்டத்தின் மூத்த படைப்பாளி எழுத்தாளர் வ. அ. இராசரெத்தினம் அவர்களைத் தாங்கி வருகிறது.*

# இலக்கியர் வ. அ. இராசரெத்தினம்

ஈழத்து சிறுகதை, ஈழத்து நாவல், ஈழத்து இலக்கியம் என்று பேசுகின்றபோது வ. அ. இராசரெத்தினம் அவர்களை தவிர்த்து விட்டு நாம் பார்க்க முடியாது.

கிழக்கு மாகாணத்திலே திருகோணமலை மாவட்டத்தின் மூதூரில் 05. 06. 1925 இல் பிறந்த இவர், 22. 02. 2001 இல் மறைந் திருக்கின்றார்.

இலங்கையின் சிறந்த சிறுகதை, நாவல், நாடக எழுத் தாளராகப் புகழ் பெற்ற இவர் வ. அ, ஈழநாகன், கீழக்கரை தேவநேய பாவாணர், வியாகேச தேசிகர் ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

1946இல் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சி கல்லூரியில் சேர்ந்து ஆசிரியராகப் பயிற்சி பெற்று ஒரு நல்லாசிரியராக பணிபுரிந்துள்ளார். இவர் எழுதிய முதலாவது சிறுகதை, ஆசிரிய பயிற்சி கல்லூரியில் இவர் இருந்த போதே எழுதப்பட்டுள்ளது.

"மலையால் இழந்த காதல்" என்ற அந்த சிறுகதை, 1948 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தினகரன் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இவரது முதல் கவிதை திருகோண மலையிலிருந்து வெளி வந்த "எரிமலை" என்ற பத்திரிகையில் 1948 இல் வெளிவந்துள்ளது. தொடர்ந்து இவர் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை என்று எழுதிப் புகழ்பெற்றுள்ளார்.

தனது இலக்கியப் பயணத்தை சுயவரலாற்று நூலாக எழுதி அதை "இலக்கிய நினைவுகள்" என்ற நூலாக வெளிக் கொண்டு வந்தார்.

வ. அ. வின் நாவல்களான "துறைக் காரன்", "கொழுகொம்பு", "கிரௌஞ்சப் பறவைகள்", "ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது" ஆகிய நாவல்கள் ஈழத்து இலக்கியப் பரப்பில் வெகுவாக பேசப்பட்டவை.

இவர் தனது மனைவிமேல் கொண்ட அபார அன்பால் "ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது" என்ற சிறுகதையை எழுதி அதே பெயரில் அதை ஒரு தொகுப்பாக அவருக்கு அர்ப்பணம் செய்துள்ளார். மேலும், இவரது "தோணி" என்ற சிறுகதை தொகுதியும் "பூவரசம் பூ" என்ற மொழிபெயர்ப்பு கவிதை நூலும் சிறப்பான படைப்புகளாகும்.

"மூதூர் புனித அந்தோனியார் கோவிலின் பூர்வீக வரலாறு" என்ற நூலையும் எழுதியுள்ளார்.

பல மேடை நாடகங்களை இவர் மேடை யேற்றி உள்ளார். பல வானொலி நாடகங் களை இவர் எழுதியுள்ளார்.

சேனையூர் மத்திய கல்லூரியில் இவர் மேடையேற்றிய பல நாடகங்கள் சமூக, அரசியல் விழிப்புணர்வு சார்ந்து இருந்தி ருக்கின்றன.

வ. அ. இரசரெத்தினம் அவர்கள் 1959 இல் கிராமசபை தேர்தலில் பிரதேச சுயாட்சியை வலியுறுத்திப் போட்டியிட்டு வெற்றி பெற்று அரசியலிலும் கால்பதித்தவர்.

> **இவருக்கு அகில இலங்கை சாகித்திய மண்டல விருது, வடகிழக்கு மாகாண சாகித்திய விருது, இலங்கை அரசின் "தமிழ்மணி" பட்டம், வடகிழக்கு மாகாண ஆளுநர் விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.**

இவருக்கு அகில இலங்கை சாகித்திய மண்டல விருது, வடகிழக்கு மாகாண சாகித்திய விருது, இலங்கை அரசின் "தமிழ் மணி" பட்டம், வடகிழக்கு மாகாண ஆளுநர் விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட் டுள்ளன.

ஈழப்போரில் இவரின் குடும்பம் பல இழப்புகளை சந்தித்து இருக்கின்றது. இவரது சேகரிப்பிலிருந்த பெறுமதியான நூல்கள், இவரின் வீட்டுடன் தீக்கிரையாகின என்ற துயரச் செய்தியும், தாக்குதலின் போது இவரது மகளும், மருமகனும் பலியாகினர் என்ற செய்தியும் துன்பியல் செய்திகளாகும்.


இவரின் சொந்த அச்சுக்கூடமும் எரியுண்டு இருக்கின்றது. போரிலேதான் இவர் தனது மனைவியையும் பறிகொடுத்துள்ளார்.

மிகச் சிறந்த ஆளுமைமிக்க எம் மண்ணின் எழுத்தாளர் வ. அ. இராசரெத்தினம் அவர்கள் 2001 ஆம் ஆண்டு தனது 75 வது வயதில் மூதூரில் காலமாகியுள்ளார்.

புகழ் பூத்த இவரின் நாமம் ஈழத்து இலக்கிய பரப்பில் என்றும் இருக்கும் வாழ்க இவர் புகழ்நாமம்.

● கோவிலூர் செல்வராஜன்

கலம்பகம்



# கம்பரும் அவர் வாழ்வியலும்

**கௌசி (ஜெர்மனி)**

நாம் எமது ஐம்புலன்களினால் பெறுகின்ற இன்பத்தை விட இலக்கிய இன்பம் பெருமை பெற்றது. அதை அப்படியே ஏற்று சுவைத்து இன்புறுவோரும் உண்டு. வாழ்க்கைக்குத் தேவையான மெய்யுணர்வைக் கொண்டு ஆராய்ந்து பார்த்துப் பொருள் கொள்வோரும் உண்டு.

இலக்கியத்தில் இன்பம் பெறுவோர் கம்பரைத் அறியாதிருக்க மாட்டார்கள். கம்பன் கற்றவர்க்கும், கற்பனை சுவை சுவைத்து இன்புறுவோர்க்கும் சுவாரஸ்யமானவர் மற்றவர்க்குச் சிதம்பர சக்கரம் போலாவார்.

இக்கம்பன் இலக்கியச்சுவை சில கண்டு இன்புற்று அவர் அகவாழ்வில் நடந்த சம்பவம் ஒன்றையும் எடுத்துக் காட்டி உலகுக்கு அறிவுரை பகரும் ஒரு கவிச்சக்கரவர்த்தி. வாழ்வியலில் எவ்வாறு வேறுபட்டுள்ளார் என எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடையேயுள்ள வேறுபாடு பற்றியும் இக்காலப் பண்புகளுடன் இவை எப்படி ஒன்றுபடுகின்றன எனவும் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

கம்பர் கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப்பட்டவர். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள் 'கம்பர் இலக்கியச்சுவை நுகர நுகர இன்பம் பயக்கும் உள்ளத்திலும் தேனூறும்' என்று கூறுகின்றார். இக்கம்பர் தமிழ் இலக்கிய வரலாற்றிலே சோழர் காலப்பகுதி என்று சொல்லப்படும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு பிற்பகுதி முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியில் வாழ்ந்தவர். இக்காலப் பகுதியில் அரசியல் தழைத் தோங்கிய காலம், செல்வச் சிறப்பு மிக்க காலம். இக்கால வாழ்வியல் இலக்கியங்கள் போல் அக்காலத்தில் உலகியலைச் சிறப்பித்துக் கூறும் இலக்கியங்கள் தோன்றின.

கம்பர் இயற்றிய காவியம் தன்னிகரில்லாத் தலைவனை எடுத்துரைப் பதாய் இருந்தமைக்கு இதுவே காரணமாய் இருந்திருக்க வேண்டும். ஒருதலைவனுடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுமுகத்தால் மக்களுடைய நல்வாழ்விற்குக்கு இன்றியமையாத அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருளையும் எடுத்துரைக்கும் இலக்கியம் காவியம் அல்லது காப்பியம் எனப்படுகின்றது.

மக்களுடைய நல்வாழ்வுக்கு இன்றியமையாத அறிவுரைகளை இலக்கியச்சுவை சொட்டுச் சொட்ட இராம கதை மூலம் கம்பரால் கம்பராமாயணம்இயற்றப்பட்டது. சொல்நயம், ஓசைநயம், கற்பனைநயம் என பல நயங்கள் எல்லாம் தன்னகத்தே கொண்ட கம்பராமாயணம் ஒரு கடல். அதில் மூழ்கி எடுப்பவை எல்லாம் முத்துக்கள். பாக்களின் சுவைகள் பலாக்கனியின் தேன் சுவைகள். அதில் ஒரு அற்புத சொல்நயம் ஒன்றை ரசிப்போம்

**சொல்நயம்:**

அஞ்சு வணத்தின் ஆடையுடுத்தாள், அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேகமிகுத்தாள், அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரியத்தாள், அலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர்ஆரத் தணிகொண்டாள்.

இப்பாடலில்அஞ்சுவணம்என்னும் ஒரு சொல் வேறுவேறு பொருள் கொடுத்து நயம் காட்டுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. முதலாவதில் ஐந்து நிறங்கள், என்றும், அடுத்து அஞ்சும் உவணம் அதாவது அஞ்சுகின்ற கருடன் என்றும் பொருள் தந்தது. அடுத்து அம்சுவர்ணம் என அழகிய பொன் எனப் பொருள் கொண்டது. அடுத்து அம்சுவள் நத்தின் எனப் பிரிந்து அழகிய பெரிய சங்கு எனப் பொருள் கொள்ளப்பட்டது. இதன் பொருளை எடுத்துநோக்கினால், ஐந்து நிறங்களில் ஆடையுடுத் தாள், பாம்புகள் எல்லாம் கண்டு நடுங்கும் கருடனின் வேகத்தைக் கொண்டவள், அழகிய பொன் கொண்டு செய்யப்பட்ட மேலாடையை அணிந்தவள், கடல்நீரில் தோன்றிய அழகிய பெரிய சங்கிலுண்டான முத்துக்களினால் செய்யப் பட்ட ஒளி பொருந்திய மாலையை ஆபரணமாக அணிந்தவள் என இலங்காதேவியைக் கம்பன் சொல்நயம் மிக்க பாடல் மூலம் வர்ணிக்கின்றார்.

இதேபோல் இவர் காவியத்தில் வருகின்ற ஒரு பாடலில் படிக்கும் போதே ஓசைநயம் மிக்கு இருக்கின்ற ஒரு பாடலை எடுத் துநொக்குவோம்.

**ஓசைநயம்:**

உறங்கு கின்ற கும்பகன்ன
உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்றுகாணெ
ழுந்தி ராயெழுந் திராய்
கறங்கு போல விற்பிடித்த
கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்குவாயி
னிக்கி டந்து றங்குவாய்

கும்பகர்ணனையுத்தத்திற்குஅழைக் கும் பாடலை ஒரு தடவை உச்சரித் துப் பாருங்கள். அதன் ஓசைநயம் நன்கு புரியும்.

இவ்வாறு சுவைகள் எல்லாம் கொட்டிக் கிடக்கும் கம்பராமாயணத்தை இக்காலப் பகுதியிலும் கம்பன் கழகம் வைத்துப் பலவாறாகப் போற்றிப் பாடுகின்றார்கள். பலவாறாக ஆராய்ந்து இன்புறுகின்றார்கள்.

இக்கம்பராமாயணம் தந்த கம்பர் சற்றுத் தலைக்கனம் மிக்கவர் என்று அறியப்படுகின்றார். சிலம்பி என்னும்ஒருவிலைமகள்கம்பனிடம்ஒரு கவி புனைந்து தரும்படிக் கேட்டாளாம். ஆயிரம் பொன் தருவாயா என்று கம்பர் அவளைக் கேட்டிருக்கின்றார். என்னிடம் ஆயிரம் பொன் இல்லை ஐந்நூறு பொன்னே இருக்கின்றது என்று சிலம்பி கூறியிருக்கின்றாள்.

மிகுதி அடுத்த வாரம்...

**கொடிய கொரோனா தீநுண்மி உலகை 'மூன்றாவது அலை' என்ற பெயரில் புரட்டி எடுத்து வருகிறது.குறிப்பாக இந்தியாவில் கோரத் தாண்டவம் ஆடுகிறது. எமதுநாட்டிலும் தினம் தினம் உக்கிரமடைந்துவருகிறது. மக்கள் சுய கட்டுப்பாட்டுடன் அவதானமாக இருப்பதே ஒரே வழி. மற்றது தடுப்பூசி. எனவே இவ்வார 'சுகநலம்' கொரோனா பற்றிய தகவல்களுடன் உங்கள் பார்வைக்கு....**

**ஆ—ர்**

# கொரோனா சோர்வடையவில்லை!



சீனாவின் ஊஹான் மாகாணத்தில் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் பரவத் தொடங்கிய கொரோனா பாதிப்பு தற்போது வரை தொடர்ந்து வருகிறது.

உலகையை முடக்கிய கொரோனா வைரஸை தற்போது வரை முடக்க முடியாமல் அறிவியல் உலகமும், மருத்துவ உலகமும் திணறி வருகிறது.

கடந்த ஆண்டின் இறுதியில் குறையத் தொடங்கிய கொரோனா பாதிப்பு தற்போது மீண்டும் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியாவில் தற்போதுதான் இரண்டாவது அலை தொடங்கியுள்ளது. முதல் அலையை விட தற்போது கொரோனா பரவும் வேகம் அதிகமாக இருந்து வருகிறது.

இந்தநிலையில், கொரோனா பாதிப்பு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ராஸ் அதோனோம், 'கொரோனா (Tedros Adhanom Ghebreyesus) தொடர்பாக குழப்பதுடனும் மனநிறைவுடனும் பேசுகிறோம் என்றால் கொரோனா பாதிப்பு முடிவடைவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

ஆனால், நிரூபிக்கப்பட்ட சுகாதார நடவடிக்கைகளின் மூலம் கொரோனா பாதிப்பை கட்டுக்குள் கொண்டு வரலாம். சமூகமும், பொருளாதாரமும், பயணமும், வர்த்தகமும் மீண்டும் தொடங்க வேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம்.

ஆனால், பல நாடுகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் தற்போது நிரம்பிவழிகின்றன.மக்கள் இறந்துகொண்டிருக்கின்றனர். இது முற்றிலும் தவிர்க்கப்படக் கூடியது. கொரோனா பாதிப்பு நிறைவடைவதற்கு நீண்ட காலம் ஆகும். ஆனால், பல காரணங்களால் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த ஆண்டின் தொடக்க மாதங்களில் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு குறைந்தததது, இந்த கொரோனா வைரஸ் மற்றும் திரிபு வைரஸை தடுத்து நிறுத்தலாம் என்பதைக் காட்டுகிறது. நாம் தற்போது ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம். கடந்த வாரத்தில் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 9 சதவீதம் அதிகரித்துள்ளது.


தொடர்ந்து ஏழாவது வாரமாக அதிகரித்துவருகிறது. இறப்பு விகிதம் 5 சதவீதம் அதிகரித்துள்ளது. கொரோனா பரவும் வேகத்தை அளவிடும் பாதையைப் பார்க்கும்போது பரவும் வேகம் மிக அதிகமாக உள்ளது. சில நாடுகளில் உணவகங்கள், இரவு கேளிக்கை விடுதிகள், சந்தைகள் மக்கள் கூட்டம் நிரம்பி இருக்கிறது. கூட்டத்தில் சிலர் மட்டும்தான் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். சிலர் இளமையாக இருப்பதால் கொரோனா பாதிப்பதை பெரிதுபடுத்தாமல் இருக்கின்றனர். ஆனால், கொரோனாவுக்கு அது ஒரு விஷயமல்ல' அமைப்பின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரித்தார்.




# புதிய COVID விகார மாற்றமும் அதிக ஆபத்தான சந்தர்ப்பங்களும்

வைரஸ் தொற்று நோய்களின் ஒரு சிறப்பு அம்சம் யாதெனில், காலத்திற்குக் காலம் அதன் தோற்றத்தில் ஏற்படும் மாற்றம் ஆகும். வைரசின் ஒரு புரதத்தில் ஏற்படும் மாற்றம் கூட அதன் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும். இம்மாற்றத்தினால் வைரஸ் பரவும் வேகம் துரிதப்படுத்தப் படக்கூடும். அத்துடன் இது வைரஸ் தொற்று நோயால் ஏற்படும் நோயின் தீவிரத்தையும் அதிகரிக்கவும் கூடும்.

தற்போது இலங்கையில் காணப்படும் COVID19 வைரஸ்களில் B.1.1.7 உட்பட பல்வேறு வகையான புதிய விகாரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதனால், தொற்று வழக்கத்தை விட வேகமாக பரவவும் மட்டுமன்றி கடுமையான நோய் அறிகுறிகளையும் ஏற்படுத்தவும் கூடும்.



உலகெங்கிலும் சில காலமாக நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, கோவிட் வைரஸ், குறித்த இடத்தில் விரைவாக பரவுவதற்கு மூன்று முக்கிய காரணிகள் உள்ளன. புதிய கோவிட் வகைகளுக்கும் இக்காரணி பொதுவானவை.

வைரசின் மாற்ற வகைகள் எவ்வாறிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், உங்களைப் பாதுகாத்துக் கொள்ள நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவ்வாபத்துக் காரணிகளைக் கொண்ட இடங்களைக் கண்டறிந்து அவற்றைத் தவிர்ப்பதேயாகும்.

இந்த கோவிட் அபாயத்தை அதிகரிக்கும் காரணிகள் யாவை ?

1. கூட்டம் அதிகமாக சேரும் இடமாயிருத்தல் – எவ்விடத்தில் சனநெரிசல் அதிகரிக்கின்றதோ அவ்விடத்தில், COVID தொற்றாளர் இருக்கக்கூடிய வாய்ப்பு அதிகரிக்கிறது, இதனால் COVID தொற்று ஏற்படும் அபாயமும் அதிகரிக்கிறது.
2. மக்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பங்கள் – குறிப்பாக ஒருவருக்கொருவர் அருகருகே நெருக்கமாக இருக்கும்போது, கதைக்கும் போது , உண்ணும் போது, பருகும்போது.
3. போதிய காற்றோட்டமற்ற மூடப்பட்ட இடத்தில் இருப்பது – மூடப்பட்ட இடங்களில் கோவிட் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பு விகிதம் வெளிப்புற காற்றோட்டமான இடங்களை விட அதிகம் என்பது தெளிவு. இது தொடர்ந்தேட்சியாக கதைக்கப்படவில்லை எனினும், இது கோவிட் பரவலில் செல்வாக்கான மற்றொரு மிக முக்கியமான பிரபலமான காரணியாகும்.

இந்த மூன்று காரணிகளில் ஒன்றாவது நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தால் அங்கு, வேறு எங்கும் இல்லாததை விட COVID தொற்று உருவாகும் அதிக வாய்ப்புள்ளது.


இந்த காரணிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை ஒரு இடத்தில் காணப்படின், அத்தகைய இடங்களில் COVID பரவுவது இன்னும் விரைவாக நிகழும்.

எனவே, இதுபோன்ற இடங்களை முடிந்த வரை தவிர்க்க வேண்டியது அவசியம். சில அவசர காரணங்களுக்காக நீங்கள் அத்தகைய இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தால், அங்கு செலவழிக்கும் நேரத்தைக் குறைப்பதன் மூலம் ஆபத்தை ஓரளவிற்கு குறைக்கலாம். குறிப்பாக இது போன்ற அதிக ஆபத்து நிலவும் காலங்களில், இக்காரணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை இருக்கும் இடங்களை இயலுமானவரை தவிர்ப்பது அவசியமாகும்.

அவ்வாறே, உங்கள் கைகளை சுத்தமாக வைத்திருப்பது மற்றும் முகக் கவசங்களை தவறாமல் அணிவது COVID பரவும் அபாயத்தை வெகுவாகக் குறைக்கும். இருப்பினும், இச் செயல்பாடுகள் மேலே உள்ள காரணிகளுள்ள இடங்களில் அதிக நேரத்திற்கு தரித்து இருந்தால் தொற்றின் அபாயத்தை முற்றிலுமாக இல்லாமற் செய்யாது.

நாடு முழுவதும் கொவிற் நோய் வேகமாக பரவி வரும் இந்த நேரத்தில், உங்களினதும் உங்கள் அன்புக்கு உரியோரினதும் பாதுகாப்பைக் கருதி மேற்கண்ட ஆபத்துக் காரணிகளைக் கொண்ட இடங்களை முடிந்தவரை தவிர்க்க மறக்காதீர்கள். மேலும், உங்கள் அன்புக்குரியவர்களின் பாதுகாப்புக் கருதி ஆபத்துக் காரணிகளைப் பற்றிய அறிவை முடிந்தவரை பகிர்ந்து கொள்ளுங்கள்...

# இந்தியாவுக்கு WHO எச்சரிக்கை!



“அதிக வீரியம் உடைய உருமாறிய கொரோனா வைரசால், இந்தியாவின் தொற்று பாதிப்பை கடுமையாக அதிகரித்து வருகிறது. இதை கட்டுப்படுத்த தவறினால், தற்போது பயன்பாட்டில் இருக்கும் தடுப்பூசியை கூட, இது செயலற்றதாக்கிவிடும் அபாயம் உள்ளது'' என, உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி டாக்டர் சவுமியா சுவாமிநாதன் எச்சரித்துள்ளார்.

இது குறித்து, உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானியும், குழந்தைகள் நல மருத்துவருமான சவுமியா சுவாமிநாதன், செய்தியாளர்களிடம் இதுதொடர்பாக தெரிவிக்கையில், இந்தியாவில் தற்போது பரவி வரும் வைரஸ், பி.1.617 வகையைச் சேர்ந்தது. அதிக வீரியம் உடைய இந்த உருமாறிய வைரஸ், விரைவாக பரவும் தன்மை உடையது. கடந்த ஆண்டு நம் நாட்டில் பரவிய கொரோனா வைரஸ் வகையை விட, இது பல மடங்கு ஆபத்தானது என்ற கூறினார்

இந்த வகை வைரஸ் குறித்து, அமெரிக்கா, பிரிட்டன் சுகாதாரத் துறையினர் கவலை தெரிவித்து உள்ளனர். நம் நாட்டில் தற்போது தொற்று பரவல் அதிகரித்துள்ளதற்கு, இந்த வகை வைரசை மட்டும் காரணமாக சொல்ல முடியாது. தொற்று தடுப்பு நடவடிக்கையை நாம் காற்றில் பறக்க விட்டு விட்டோம். கூட்டம் கூடுவதையும், மக்கள் பயமின்றி இயல்பான வாழ்க்கை வாழவும் அனுமதித்தது பெரிய தவறு.

கொரோனா முடிவுக்கு வந்துவிட்டது என நம்பி, முக கவசம் அணிவது உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளை மக்கள் கைவிடத் துவங்கியதே, இரண்டாம் அலைக்கு காரணமாக அமைந்து விட்டது.

நாட்டின், 70 – 80 சதவீத மக்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள, பல மாதங்கள் ஆகிவிடும். எனவே, தடுப்பூசி மட்டுமே நமக்கு முழு பாதுகாப்பை அளித்து விடாது. மக்களின் சுய கட்டுப்பாடும், சிறந்த மருத்துவ வசதிகள் மட்டுமே, இந்த நிலைமையில் இருந்து நம்மை மீட்க உதவும்.

இந்த உருமாறிய வைரஸ், அது மேலும் உருமாறக் கூடிய அபாயம் உள்ளது. அப்படி உருமாறும் போது, தற்போது பயன்பாட்டில் உள்ள தடுப்பூசிகளை கூட அது செயலற்றதாக்கிவிடக் கூடிய அபாயம் உள்ளது. அப்படி நிகழ்ந்தால், அது இந்த உலகத்துக்கே அச்சுறுத்தலாக மாறிவிடக் கூடும் என்றும் அவர் கூறினார்.

# கண்களைச் சுற்றி வரும் கரு வளையம்

சில பெண்களுக்கு முகம் பளபளப்பாக இருந்தாலும் கண்களை சுற்றி கருவளையம் இருந்தால் பார்க்கவே நன்றாக இருக்காது. பிரசவத்துக்குப் பின் சரியாக தூங்காமல் சில தாய்மார்களுக்கு கண்களை சுற்றி கருவளையம் இருக்கும். அதை எளிய முறையில் நிரந்தரமாகப் போக்கிட சில இயற்கை சிகிச்சைகள் உள்ளன. அவையாவன,



- வெள்ளரி - 3 துண்டுகள்
- உருளை - 3 துண்டுகள்
- தேன் - 1 தேக்கரண்டி
- கற்றாளை - 1 தேக்கரண்டி ஜெல்
- பன்னீர்

வெள்ளரியையும் உருளையும் தனி தனியாக மிக்ஸியில் அரைத்து சாறு எடுத்துக் கொள்ளவும். இதில் தேனும் கற்றாளை ஜெல்லும் கலந்து நன்கு கலக்கவும். இப்போது கிரீம் ரெடி.

இதை இரவில் படுக்கைக்குப் போகும் முன்பு கண் கீழுள்ள கருவளையங்களை பன்னீரால் சுத்தமாக துடைத்த பின்பு கண்களை சுற்றி இந்த கிரீமை தடவவும். மறுநாள் காலை கழுவி விடலாம்.

ஒரு வாரத்திலே கருவளையம் போவதைப் பார்க்க முடியும்.

# கர்ப்ப காலத்தில் சாப்பிட, தவிர்க்க வேண்டிய அசைவ உணவுகள்

பொதுவாக கர்ப்பிணி பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் அசைவ உணவுகளை உண்ணலாமா? கூடாதா? என்ற சந்தேகம் ஏற்படலாம். ஆனால் அசைவ உணவுகளில் உள்ள சத்துக்களும் கரு வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அசைவ உணவுகளை கர்ப்ப காலத்தில் உண்பது குழந்தைக்கும் தாய்க்கும் கேடு விளைவிக்கும் என்று சிலர் சொல்ல நீங்கள் கேட்டிருக்கலாம். ஆனால் மருத்துவர்களும் ஊட்டச்சத்து நிபுணர்களும் இது முற்றிலும் தவறானது என்றும் அசைவ உணவுகளை கர்ப்ப காலத்தில் சேர்த்துக் கொள்வதில் எந்தவித தீங்கும் ஏற்படாது என்றும் கூறுகின்றனர்.



நீங்கள் கர்ப்பமாக இருக்கும் காரணத்தினால் உங்கள் உணவில் அசைவ உணவுகளை குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு ஏதேனும் ஒவ்வாமை இல்லாவிட்டால். நீங்கள் அசைவ உணவுகளை தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். கோழி. மீன். முட்டை போன்றவற்றை கர்ப்ப காலத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணி பெண்கள் உண்ண கூடிய அசைவ உணவுகள் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**சிக்கன், மட்டன், மாட்டிறைச்சி, வேகவைத்த முட்டை, அசைவ சூப்.**

தவிர்க்க வேண்டிய அசைவ உணவுகள்

**பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள்.**

மங்கையர் மகுடம்

ஜெனிதா மோகன்

# மட்டக்களப்பின் கிராமப்புற பெண்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

எஸ்.ரி.சீலன்



நமது கிராமப்புறங்களில் வாழும் பெண்கள் தங்களது தினசரி பயன்பாட்டிற்காக அவர்களது மொத்த குடும்பங்களுக்குமான உணவு, நீர் மற்றும் அடுப்பெரிப்பதற்கான விறகுகளை சேமிப்பதில் பெரும்பாலும் அவர்களே பொறுப்பாக இருந்து கவனிக்கின்றார்கள்.

குறிப்பாக மட்டக்களப்பின் வறண்ட பகுதிகளில் காலநிலை மாற்றத்தால் அடிக்கடி வறட்சி நிலவுவதால், பெண்கள் சுத்தமான நீரினைப் பெற்றுக்கொள்ள அதிக தூரம் பயணிக்க வேண்டும்.

இது இன்னும் அவர்களது வேலையை சிரமத்துக்குள்ளாக்கி அவர்களது நேர சூசியை இன்னும் இறுக்கி விடுகின்றது.

இவ்வாறான சிரமங்களால் அவர்கள், மேலும் வருமானம் ஈட்டவோ, கல்வி பெறவோ அல்லது ஓய்வு பெறவோ அவர்களுக்கு மிகக் குறைந்த நேரத்தை அளிக்கிறது. திடீரென ஏதாவது அனர்த்தங்கள் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டால் அந்த அவசரகாலத்தில் வருமானத்தைப் பெறுவதற்காக அவர்களுக்கு என விற்கக் கூடிய நிலம் அல்லது பிற சொத்துக்கள் சொந்தமாக இல்லாததால் பெண்கள் எமது பகுதிகளில் இயற்கை பேரழிவிலிருந்து மீள்வது கடினமானதாக உள்ளது.

காலநிலை மாற்றத்தைப் பொறுத்த வரையில், பெண்கள் அவர்களுக்கு முன்மாதிரியாக, முடிவெடுப்பவர்களாக மற்றும் சுற்றுச் சூழல் பொறுப்பாளர்களாக பங்கேற்க வாய்ப்பளிப்பதன் மூலம், காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிக்க உதவுவதில் முக்கியபங்கு வகிக்க முடியும்.

> ஒரு நாட்டில் பெண்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களோ அவ்வளவு தூரமே அந்நாடு முன்னேறும்.
> ஜவஹர்லால் நேரு

மட்டக்களப்பினைப் பொறுத்தவரை அதிக சதவீதம் பெரிய பதவிகளில் பெண்களே இருக்கின்ற இந்த நிலையில் அவர்களுக்கான மீட்சி பற்றிய கரிசனை அதற்கான சாதகமான திட்டமிடல்கள் இன்னும் அதிகரிக்கப்படுவது இந்த புதிய தசாப்தத்தின் புதிய மைற்கல்லாக இருக்கலாமல்லவா!

கல்விப் புலத்தில் உள்ளவர்கள் இதற்கான கனதியான விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டிய இடைவெளி இன்னும் அப்படியே இருக்கின்றது. அதற்கான மன்றங்களை புதுப்பித்து உண்மைத்தன்மையுடன் அவர்களை கரிசனைகொள்ளும் ஒரு அமைப்பியலின் தேவை இன்னும் உணரப்படவில்லையா? என்பது கவலை கலந்த கேள்வி.

# தமிழ்

ஓர் சுருக்கமான பதிவு...

தமிழில் மொத்தம் எழுத்துக்கள் 247.

1. உயிர் எழுத்துக்கள் 12.
2. மெய் எழுத்துக்கள் 18.
3. உயிர்மெய் எழுத்துக்கள் 216
4. ஆய்த எழுத்து 1.

உயிர் எழுத்துக்கள் என்பது உயிரின் உற்பத்தி சக்தியை அதிகபடுத்தும்.

மெய் எழுத்துக்கள் என்பது மனதை அறிய கூடிய மற்றும் வலுப்படுத்தும் சக்தியாக உள்ளது.

உயிர் மெய் எழுத்துக்கள் என்பது உடலையும் மனதையும் சேர்த்து இறைவனை அறிய கூடிய செயலை காட்டும்.

ஓம் என்பதில் உள்ள அ உ ம் என்பது, என்ன என்ன எழுத்துகள் உள்ளன. கவனிக்க,

நாம் பேசும் தமிழ் தானாக வரவில்லை. மூன்று நபர்களின் கண்டுபிடிப்பால் வந்தது. அதாவது சிவன், முருகன், அகத்தியர் கொண்டு உருவாக்கபட்டது

சிவனால் முருகனுக்கு கொடுக்கப்பட்ட பணி தமிழ் மொழியை உருவாக்குவது.

முருக பெருமான் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து உருவாக்கியுள்ளார்.

ஆனால் அதில் வரைமுறை இல்லாமல் இருந்தது அதை சரி செய்ய அப்பணி மீண்டும் அகத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அகத்தியர் அதை இலக்கணம் செய்து வெளியிட்டார்.




இப்போது தமிழ் எழுத்துக்கு வருவோம்

மானிடர் நாள் முழுதும் சுவாசிக்கும் காற்றில் மூன்றில் ஒரு பகுதி உடலின் மூலாதாரத்தை அடையாமல் வீணடிக்கப்படுகிறது. அந்த வீணடிக்கப்படும் மூன்றில் ஒரு பகுதி சுவாசத்தையும், வீணாக்காமல் சுவாசிப்பதே சுவாச பந்தனம் எனப்படும் யோகக் கலையாகும்.

இப்போது உயிர்மெய்களுக்கு வருவோம் உயிர் மெய் எழுத்துகள் 216.

தமிழானது பேசுவதற்கு மட்டும் உருவாக்கவில்லை. நீண்ட நாள் வாழ்வதற்கு உருவாக்கபட்டவை.

'தமிழுக்கும் அமுது என்று பேர்' இப்பாடல்.

அதாவது நமது தலையில் அமிர்தத்தை தருவதற்கு ஒரு எழுத்து உள்ளது. அது "ழ்" இதை தொடர்ந்து சொன்னால் அமிர்தம் சுரக்கும்.

அதேபோல் தமிழ் எழுத்தை வைத்து பஞ்சபூதங்களை இயக்க முடியும்.

திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - **ஔ**

திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட (1705) ஒரெழுத்து - **னி**

திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - **ஙீ,ஙு**

இதையும் கருத்தில் கொள்க

இறைவனால் கற்று கொண்டு வந்த இரண்டு உயிர் எழுத்து **உ + அ = (குவா)**

இன்னும் எம் தமிழில் நிறைய இரகசியம் உள்ளன.

**தமிழை அதிகமாக பேசி சக்தி பெற முடியும்...**

பா. புஷ்பகாந்தினி



# மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடிக்க வேண்டும்

## பாடகி ரேஷ்மா



இன்றைய காலகட்டத்தில் உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தென்னிந்தியத் தமிழ்ப் பாடல்களை அதிகம் விரும்பிக் கேட்கின்றனர். இந்த நிலையில் அதிகளவான இளம் பின்னணிப் பாடகர்களும் பாடகிகளும் தென்னிந்தியத் திரைப்படத்துறையில் புதிதாக அறிமுகமாகி வருகின்றனர். இந்த நிலையில் திறமை மூலம் தமிழ் ரசிகர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்துக் கொண்ட இளம் பாடகர்களும் பாடகிகளும் இருக்கவே செய்கின்றனர். அந்த வகையில் இந்திய தென்னிந்தியத் திரைப்படத்துறையில் இசைப் பிரிவில் தனது திறமையால் தடம் பதித்து உலகில் பரந்து வாழும் தமிழ் நேயர்களிடையே அதிக வரவேற்பைப் பெற்ற இளம் பின்னணிப் பாடகி ரேஷ்மா எமக்காக விசேட நேர்காணல் ஒன்றை வழங்கினார். இலங்கையின் கல்முனை நெற் மின்னிதழுக்கு அவர் வழங்கிய நேர்காணல் தொகுத்து வழங்கப்படுகின்றது.

**? நீங்கள் தென்னிந்திய இசைத் துறையில் எவ்வாறு நுழைந்தீர்கள்?**

ரேஷ்மா ஷாம் என்பது எனது முழுப் பெயர் ஆகும். எனக்கு ஐந்து வயதாக இருக்கும் பொழுது நான் எங்கள் வீட்டில் இடம்பெற்ற பூஜை நிகழ்வொன்றில் பாடினேன். இதன் மூலம் தான் எனது பாடல் திறமையை எனது பெற்றோர் உணர்ந்து கொண்டனர். எனது இல்லத்தில் சுவாமி ஐயப்பன் பூஜை நடைபெறுவது வழமை. இவ்வாறு ஒரு பூஜை நிகழ்வின் போது நான் எனது பாடல் திறமையை வெளிப்படுத்தினேன்.

எனது பாட்டனார் ஒரு பாடகர் ஆவார். பாலமுரளி கிருஷ்ணா என்பது அவரது பெயர் ஆகும். எனது தாயார் என்னை அவரிடம் அழைத்துச் சென்று ஒரு பாடலைப் பாடச் சொன்னார். நானும் இயல்பாக ஒரு பாடலைப் பாடினேன். அதைப் பார்த்த எனது பாட்டனார் எனக்கு சிறு வயது முதல் இசை ஞானம் இருப்பதை உணர்ந்து கொண்டு இசையைக் கற்றுக் கொண்டால் அந்தத் துறையில் நான் முன்னேறுவேன் என்று கூறினார். இதனையடுத்து நான் சிறந்த இசை மேதைகளைச் தேடிச்சென்று இசையைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன் என்று மகிழ்வுடன் கூற விரும்புகிறேன்.



நானும் ஆர்வத்துடன் இசையைக் கற்றுக் கொண்டு எனக்கான வாய்ப்புகளை தேடினேன். அந்தத் தேடலில் நான் வெற்றி பெற்றேன் என்று கூற வேண்டும். எனக்கான வாய்ப்புகள் என்னைத் தேடி வர ஆரம்பித்தன. எனது முயற்சிக்கு வெற்றியும் கிடைத்தது. தென்னிந்தியத் திரைப்படத்துறையில் பின்னணிப் பாடகியாக நான் உயர்ந்து நிற்கிறேன். இளம் வயதில் பின்னணிப் பாடகியாக உருவெடுத்தமை குறித்து மகிழ்ச்சி அடைகிறேன் என கூற விரும்புகிறேன்.

**? எந்தத் துறையாக இருந்தாலும் அதில் முன்னேறுவதற்கு குருநாதர்களின் ஆசிர்வாதம் அத்தியாவசியமாகும். அந்த வகையில் உங்கள் குருநாதர்களைப் பற்றிக் கூறுங்கள்.**

எனது சொந்தப் பாட்டி சுபா ஐயர் அவர்களே எனது முதலாவது குருநாதராக விளங்கினார். இதனையடுத்து, மகதி இசைப்பள்ளியில் பின்னணிப் பாடகி மகதி அவர்களின் தந்தையாரிடம் பாடல்களைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினேன். இதனையடுத்து, மேலும் பல இசை ஆசிரியர்களிடம் இசையை முறைப்படி கற்றுக் கொண்டேன். நமது குருநாதர்கள் எப்போதும் போற்றத்தக்கவர்கள். ஏனெனில், நாம் வாழ்வில் முன்னேற வேண்டுமாயின் பெற்றோர்கள் மற்றும் பெரியவர்கள் குருநாதர்கள் ஆகியோரின் ஆசிர்வாதங்கள் எப்போதும் நமக்கு வேண்டும். கல்முனைநெட் பத்திரிகை ஊடாக எனது குருநாதர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த இந்த அனைவருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

**? நீங்கள் ஆரம்பத்தில் பல இசைக் கச்சேரிகளிலும் பாடியுள்ளீர்கள். அது பற்றிக் கூறுங்கள்.**

ஆரம்பத்தில் நான் பல இசைக் கச்சேரிகளில் பாடி எனது திறமையை வெளிப்படுத்தி உள்ளேன். இசைப்புயல் ஏ. ஆர். ரகுமான் அவர்களின் இசைப்பள்ளியில் நிர்வாக அதிகாரியாக கடமையாற்றும் ஒருவர் அதற்கான சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தார் என்று கூற வேண்டும். அவரது துணையுடன் ராக் என்னும் பெயரைக் கொண்ட இசைக் குழுவில் இணைந்து பல கச்சேரிகளில் நான் பாடினேன். இதன் மூலம் தமிழ்நாடு எங்கும் நான் பிரபலமடையத் தொடங்கினேன்.

இவ்வாறு இசைக் குழுக்களில் பாடும் போது எனக்கான தனியிடத்தை இசைத் துறையில் தக்கவைத்துக்கொள்ளத் தொடங்கினேன். மேலும், இசைக்குழுவில் பாடும்போது மேடை அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன் என்று கூறவேண்டும்.

**? பல போராட்டங்கள், பல போட்டிகள் போன்றவற்றில் வெற்றி பெற்ற பின்னரே நீங்கள் இளம் பின்னணிப் பாடகியாக தென்னிந்தியத் திரைப்படத் துறையில் வலம் வருகிறீர்கள் அது பற்றிக் கூறுங்கள்.**

கல்லூரிக் காலங்களை நினைத்தால் அவை எப்போதும் மகிழ்ச்சியான தருணங்கள் என்றே கூற வேண்டும். அந்த வகையில் எனது கல்லூரிக் காலங்களில் பல போட்டிகளில் கலந்து கொண்டு நான் வெற்றி பெற்றுள்ளேன். கல்லூரியில் நடைபெறும் இசைப் போட்டிகளில் பங்குபற்றி நேரடியாக முதலாம் இடத்தை போட்டியின்றி பெற்றுக் கொண்ட அனுபவம் எனக்கு உண்டு. அத்துடன் பல தென்னிந்தியத் தொலைக் காட்சிகளிலும் நடைபெற்ற இசைப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளேன். இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற எனக்கு இசையில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலும் வலுப்பெற்றது. இதையடுத்து ஏ. ஆர். ரகுமான் இசைக் கல்லூரியில் ஹிந்துஸ்தானி இசையைக் கற்றுக்கொண்டேன். கலர் தொலைக்காட்சி, சன் தொலைக்காட்சி, விஜய் தொலைக்காட்சி, போன்ற உலகப் பிரபல்யம் பெற்ற தொலைக்காட்சிகளில் இடம்பெற்ற பாடல் போட்டிகளிலும் கலந்துகொண்டு நான் வெற்றி பெற்றேன் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**? நீங்கள் ஆல்பங்கள் மற்றும் இனிய இசை வெளியீடுகளை வெளியிட்டு வருகின்றீர்கள் அது பற்றிக் கூறுங்கள்.**

எனது வெற்றிக்குப் பின்னால் எனது அண்ணன் இருக்கிறார். அவர்தான் எனக்கு எப்போதும் தூண்டுகோலாக விளங்குகிறார். எனது பாடல்களை யூ டியூப் மற்றும் ஏனைய இணையதளங்களில் வெளியிட வேண்டுமென்று அவர் ஆலோசனை வழங்கியதுடன் அதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். நான் பல பாடல்களை மறுபடியும் உருவாக்கம் செய்யவும் தொடங்கினேன். உருவாக்கம் என்பது தென்னிந்தியத் திரைப் படப் பாடல்களை மீண்டும் நாம் உருவாக்கிப் பாடுவதாகும். அந்தச் செயற்பாட்டிற்கு யூ டியூபில் அனேக வரவேற்பு கிடைத்தது. காலா திரைப்படத்தின் கண்ணம்மா எனும் பாடலை நான் உருவாக்கம் செய்து வெளியிட்டேன். அதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. தனிப்பட்ட இசைக்கோவைகளையும் இசை வடிவில் வெளியிட்டுள்ளேன். அதற்கு நல்ல வரவேற்பு ரசிகர்கள் மத்தியில் காணப்பட்டது.

> இசைத்துறையில் நான் கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் நிறைய உள்ளது. அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எனது எதிர்கால இலட்சியங்களில் ஒன்றாகும்.

**? சன் தொலைக்காட்சியில் இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய அனுபவம் குறித்துக் கூறுங்கள்.**

சன் சிங்கர் நிகழ்ச்சி பற்றிக் கூற வேண்டுமாயின், நான் அந்த நிகழ்ச்சியில் நிறைய விடயங்களைக் கற்றுக்கொண்டேன் என்று கூறவேண்டும். கிட்டத்தட்ட ஒரு வருட காலம் சன் சிங்கர் நிகழ்ச்சியில் தொடர்ச்சியாக பங்குபற்றினேன். சன் சிங்கர் நிகழ்ச்சியில் நீதிபதிகளாக இருந்தவர்கள் மிகவும் நட்புடன் என்னுடன் பழகினார்கள். மேலும், எம்மை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்கள் எமக்கான ஆலோசனைகளை வழங்கினார்கள். குறிப்பாகக் கூற வேண்டுமானால் இசைத் துறையில் முன்னேற்றப் பாதைக்கான பல விடயங்களை நான் அங்கு கற்றுக் கொண்டேன். மேலும், பின்னணிப் பாடகர் மனோ அவர்கள் பல ஆலோசனைகளை எனக்கு வழங்கினார் என்று பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேலும், குரல் வல்லுனர்களான சுர்முகி, ஸ்ரீ வர்த்தினி ஆகியோர் நமக்கான ஆலோசனைகளை வழங்குவார்கள். அனைவரும் ஒரே குடும்ப அங்கத்தவர்கள் போல இருந்தோம்.

**? விஜய் தொலைக்காட்சியின் சூப்பர் சிங்கர் அனுபவம் பற்றி கூறுங்கள்.**

விஜய் தொலைக்காட்சியின் சூப்பர் சிங்கர் ஜூனியர் நிகழ்ச்சி முதல் அதனையடுத்து வந்த அனைத்து இசைப் போட்டிகளிலும் நான் பங்குபற்றியுள்ளேன். பல லட்சக்கணக்கானோர் மத்தியில் வெற்றி பெற்று அரங்கத்திற்குள் நுழைவது மகிழ்ச்சியைத் தரும். இம்முறை இடம்பெற்ற சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் பல லட்சக்கணக்கானோர் மத்தியில் நான் தெரிவு செய்யப்பட்டு முதல்தர பாடகர்களுள் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். இதனையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியிலும் நான் பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன் என மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**? நீங்கள் பல மொழிகளிலும் தென்னிந்தியத் திரைப் படங்களில் பாடி வருகிறீர்கள். அது பற்றி கூறுங்கள்.**

பல திரைப்படங்களில் பின்னணிப் பாடகியாக பாடியுள்ளமை மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அக்ஷரா ஹாசன் நடித்துள்ள அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் திரைப்படத்தில் நான் பாடியுள்ளேன். இந்தத் திரைப்படம் விரைவில் வெளிவர உள்ளது. தற்போது முன்னோட்டக் காட்சிகள் வெளிவந்துள்ளன. மேலும், பல தமிழ்த் திரைப்படங்களில் பாடல்களைப் பாடியுள்ளேன். தெலுங்கு மலையாளம் போன்ற மொழிகளிலும் பாடியுள்ளேன். தெலுங்கில் உருவாகும் கோமாளி எனும் திரைப்படத்திலும், ஜிப்ஸி திரைப்படத்திலும், தெலுங்கில் உருவாகி வரும் சிக்ஸர் திரைப்படத்திலும் பாடல்களைப் நான் பாடியுள்ளேன்.

**? கலையுலக வாழ்வில் உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?**

இசைத்துறையில் நான் கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் நிறைய உள்ளது. அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எனது எதிர்கால இலட்சியங்களில் ஒன்றாகும். பல இசையமைப்பாளர்களின் இசையில் நான் பாடவேண்டும் என்பதும் எனது இலட்சியங்களில் ஒன்றாகும். உலகளவில் மதிக்கப்படுகின்ற ஒரு பாடகியாகவும் மக்கள் மனங்களில் நீங்கா இடமும் அங்கீகாரமும் பெற்ற ஒரு பாடகியாகவும் உருவாக வேண்டும் என்பதும் எனது இலட்சியங்களில் ஒன்றாகும். மிகப் பெரிய அரங்கில் அதிகளவான மக்கள் மத்தியில் எனது பாடல்களை நான் பாடும்போது அந்தக் கோரஸ் வரிகளை பொதுமக்கள் என்னுடன் சேர்ந்து பாடவேண்டும் என்பது எனது மிகப்பெரிய இலட்சியங்களில் ஒன்றாகும்.

இலங்கை நேயர்கள் மத்தியில் எனது கருத்துக்களைக் கொண்டு சென்ற கல்முனைநெட் பத்திரிகைக்கு மீண்டும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நேர்காணல்: கிரிஷாந்த்**

படையல்
பி. எஸ். புவிராஜா



# கற்பித்தல் வெற்றிபெற வேண்டுமோ? சற்று வாசியுங்கள்...

கா. சாந்தகுமார்

ஆயிரம் அர்ச்சனைகளை விட ஒரு ஆசிரியரின் வாழ்த்துச் செய்தி மேலானது என்பார்கள். அத்தகைய வாழ்த்துச் செய்தியை வழங்கக்கூடிய ஆசிரியர்களாகிய உங்களின் கற்பித்தல் வெற்றி பெறுவதில் கல்வி உளவியல் பார்வையில் வகுப்பறை நிர்வாகம் முக்கியத்துவம் பெறுகின்றது.

அந்த வகையில் ஆசிரியர் பாட அறிவை கொண்டு நல்ல கற்பித்தல் முறைகளை பயன்படுத்தினாலும் அவர் தமது வகுப்பறையில் நல்ல நிர்வாகத்தை ஏற்பாடு செய்தாலன்றி அவருடைய பணியில் சித்தி காண முடியாது. ஆகவே வகுப்பறையில் ஒழுங்கு நிலைநாட்டப்படுவது அவசியம் ஆகும். இதனை ஆசிரியர் கடுகடுத்த முகத்துடனும் அதிகாரத் தொனியுடன் நிலைநாட்ட முடியாது.

தமது பாடங்களை ஆயத்த படுத்துவதுடன் ஆசிரியர் தாம் கற்பிக்கும் போது வகுப்பறையில் என்னென்ன இடர்பாடுகள் ஏற்படக்கூடும் என்றும் அவர் சிந்தனை செய்தல் வேண்டும். பொதுவான சில குறித்த கட்டுப்பாடுகளை ஆசிரியர் ஏற்கனவே ஏற்பாடு செய்து பழக்கத்திற்கு கொண்டு வருதல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் ஒழுங்குடன் நுழைதல், ஆசிரியர் வரும்போது எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தல், பயிற்சிகளை செய்து முடித்த பின்னர் அவற்றை ஒழுங்காக ஆசிரியரிடம் காண்பித்தல், ஆசிரியர் வாய்மொழி வினாக்கள் கேட்கும்போது ஒழுங்கான முறையில் விடை அளித்தல் போன்ற சாதாரணமான ஒழுங்குமுறைகள் வகுப்பறையில் நடைமுறையில் கொண்டு வரப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் வகுப்பறையில் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அதிகாரத்தை பிரயோகிப்பதனால் நல்ல விளைவு கிடைக்காது. தமது ஆளுமை பண்புகளினாலும் கற்பிக்கும் திறமையினாலுமே அவர் கட்டுப்பாடுகளை மாணவர் ஏற்குமாறு செய்யலாம். அனாவசியமாக திணிக்கப்படும் கட்டளைகளை மாணவர்கள் ஏற்க மாட்டார்கள்.

வகுப்பறையில் மாணவர்கள் ஊக்கத்துடன் தமது வேலையில் முன்னேறுவதற்கு ஆசிரியர் ஜனநாயக முறையில் கடமையாற்றும் தலைவராக நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியர் தமது வகுப்பறையில் ஜனநாயக தலைமைத்துவப்பாங்கு ***(Leadership role)*** கொண்டவராக இருக்க வேண்டியதன் அவசியத்தை ***Lewin, Lippit & White*** ஆகியோர் நடாத்திய பரிசோதனையின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அவர்கள் மூன்று தொகுதி மாணவர்களை தெரிவு செய்தனர். இத்தொகுதிகள் ஒவ்வொன்றும் திறமை, வயது, சமூகச் சூழ்நிலை ஆகியனவற்றில் சமமானவர்களை கொண்டதாக காணப்படும்.

முதலாவது தொகுதிக்கு ஒரு ஆசிரியர் கற்பிக்கும் போது அவர் சனநாயக முறையில் மாணவரின் அபிப்பிராயங்களையும் வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடி பணியாற்றினர். இரண்டாவது தொகுதிக்கு அவர் சர்வாதிகார முறையில் மாணவருக்கு பணிகளை பங்கிட்டு தனது முறைப்படியே மாணவர்களுக்கு தொழில் ஆற்ற வேண்டும் என்று பணித்தார். மூன்றாவது தொகுதிக்கு அவர் தலையிடாத முறையில் மாணவர் செய்யும் பணிகளில் கரிசனை காட்டாது நடந்து கொண்டார். பரிசோதனையில் கொடுக்கப்பட்ட பணியில் முதலாவது தொகுதியினர் அதிகூடிய முன்னேற்றம் பெற்றனர் என்றும் அத்தொகுதியில் சீரான சமூகக் கவி நிலை ***(SOCIAL CLIMATE)*** நிலவியது என்றும் காணப்பட்டது. இரண்டாவது தொகுதி மாணவர் ஆசிரியர் முன்னிலையில் பீதியுடன் பணியாற்றினார் எனவும் அவர் இல்லாத வேளையில் தம் இச்சைப்படி கட்டுப்பாட்டை மீறி நடந்து வந்தனர் எனவும் அறியப்பட்டது. மூன்றாவது தொகுதியினர் செய்வதறியாது குறிக்கோளின்றி அவதிப்பட்டனரென்றும் பணியில் மனமுறிவே பெற்றனரெனவும் காணப்பட்டது. இப்பரிசோதனை மூலம் சனநாயக முறையில் அமைந்த நிர்வாகமே கூடிய பயனுள்ளது என்பது புலனாகின்றது.

வகுப்பறையில் ஒழுங்கை நிலைநாட்ட ஒரு குறிப்பிட்ட செயன்முறை இல்லை. அது ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்ற வகையில் அமையும் இதற்கு ஆசிரியரின் அனுபவமும் ஓரளவு வேண்டும் எனினும் சில குறித்த உத்திகளை நீங்கள் கையாளலாம்.

1. மாணவரின் பெயர்களை ஆசிரியர் அறிந்து அவர்களை அப்பெயராலேயே அழைத்தல் வேண்டும். இதுவே கூடிய தாக்கம் கொண்டது மாணவர்கள் வகுப்பறையில் குறிப்பிட்ட ஆசனங்களில் எப்போதும் உட்காருவது நன்று அவர்களை ஆசிரியர் அறிந்து கொள்வதற்கு இது உதவும்.



2. விடைத்தாள்களையும் புத்தகங்களையும் மாணவரிடம் பரிமாறுவதற்குரிய சில குறித்த திட்டங்கள் இருத்தல் வேண்டும் எல்லோரும் எழுந்தவாறு அங்கும் இங்குமாக நடமாடித் திரிந்து குழப்ப நிலையை ஏற்படுத்த ஆசிரியர் இடம் கொடுக்கக் கூடாது.
3. ஆசிரியர் மாணவரிற் கொள்ளும் மனப்பான்மை முக்கியமாகும். அவர் புன்முறுவலுடன் மாணவருக்கு ஏற்ற முறையில் உறுதியுடனும் , நேர்மையுடனும், ஒரு சார்பின்றி மாணவரிடம் அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும்.
4. ஆசிரியர் பண்பான சொற்களை திருத்தமாக உபயோகித்தல் வேண்டும். கொச்சையான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது அதிகாரமானவ தொனியில் கதைக்கக் கூடாது.
5. பாடங்களை ஆசிரியர் ஆயத்தம் செய்து மாணவர் ஒவ்வொருவரும் சித்தி பெறுமாறு செயல்களை கொடுப்பாரானால் அவர்கள் உற்சாகத்துடன் கற்பர். அப்போது ஒழுங்கு தானாகவே நிலவும்.
6. மாணவருக்கு கொடுக்கும் செயல்களும் பயிற்சிகளும் அவர்களுக்குத் தெளிவாக விளங்க வேண்டும் நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் எங்கு தொடங்கி எவ்வாறு முடிக்க வேண்டும் என்பது வரை மாணவருக்கு தெரிய வேண்டும்.
7. ஆசிரியர் கரும்பலகையில் எழுதும்போது எழுதுவதை மாணவர்கள் வாசிக்க முடியாதவாறு மறைத்து நிற்றல் கூடாது. இதனால் குழப்ப நிலை உண்டாகலாம். மேலும் நீங்கள் கரும்பலகையில் எழுதும்போது புத்தகங்களை அடிக்கடி புரட்டுவதை அல்லது பார்ப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
8. கரும்பலகையில் எழுதும்போது எழுத்துக்களை மறைத்துக்கொண்டு தேவையற்ற விடயங்களை பேசிக்கொண்டும் எழுதுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.
9. கொடுக்கப்படும் பயிற்சிகள் உடனுக்குடன் திரட்டப்பட்டு திருத்தம் செய்யப்பட்டு மாணவருக்கு கொடுக்கப்பட வேண்டும்.
10. மாணவரைத் தண்டிப்பதற்கு ஆசிரியர் பாட வேலைகளை பயன்படுத்தலாகாது. சில ஆசிரியர் பாடத்தில் பிற்போக்கான மாணவருக்கு அதிக வீட்டுவேலை கொடுப்பதுண்டு சிலர் மாணவரை பாடசாலை நேரத்தில் பின் மறியல் செய்வதும் உண்டு இவை கற்பித்தலின் நோக்கத்திற்கு முரண்பட்டவை.
11. கற்பித்தலிலும் பாடவிடயத்திலும் ஆசிரியர் தாமும் உற்சாகத்தையும் விருப்பத்தையும் காட்ட வேண்டும் அப்போதுதான் மாணவரும் ஊக்கம் பெறுவர்.
12. ஆசிரியர் வகுப்பறையில் முழுநேரமும் ஒரே இடத்தில் நின்றவாறே உட்கார்ந்தவாறே கற்பிக்கும் முறையை மாற்றி அமையுங்கள். அத்துடன் சலிப்பு ஏற்படும்படி ஒரே தொனியில் கதைக்கவும் கூடாது.
13. மாணவருடன் வேண்டத்தகாத வாக்குவாதங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். குறித்த பாடத்துடன் தொடர்பான கருத்து வாதங்கள் பயனுடையன. ஆனால் அவற்றில் ஆசிரியர் மனவளர்ச்சி உறுதியின்றி தமது சொந்த அபிப்பிராயங்களை திணிக்க முற்படக் கூடாது.
14. மாணவருடன் மரியாதையுடன் ஆசிரியர் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர் அவருக்கு கீழ் பணிவர் தண்டனைகளை குறைத்து வெகுமதிகளைக் கூட்டி கற்பித்தல் நன்று.
15. தவறிழைக்கும் மாணவரைப் பிறர் முன் தண்டிப்பது அல்லது தூற்றுவது தவிர்க்கப்படல் வேண்டும். மாணவரின் குற்றத்துக்காக தண்டனை அன்றி குறித்த மாணவரில் உள்ள வெறுப்பு மனப்பான்மையினாலன்று என்பதை மாணவர் உணருமாறு ஆசிரியர் நடந்து கொள்ள வேண்டும். ஆகவே பழிவாங்கும் நோக்குடன் தண்டனை அளிக்கக்கூடாது.
16. ஆசிரியர் மாணவரின் உடலை வருத்தும் தண்டனை கொடுக்கக்கூடாது. வகுப்பறையில் நிலவும் சிறிய ஒழுக்க பிரச்சனையையும் அவர்தாமே சுமூகமாக தீர்க்க வேண்டும். எடுத்ததற்கெல்லாம் மேலாதிகாரிகளிடம் அனுப்புவதை தவிர்த்து கொள்ளும் அதேவேளை மாணவர்களின் முன்னால் டென்ஷன், சலிப்படைவதைத் தவிர்த்து கொள்ளுங்கள்.
17. சாதனங்களைப் பயன்படுத்தும் போது அதை பயன்படுத்தும் நேரத்தில் மாத்திரம் வெளியில் எடுங்கள். முடிந்ததும் உடனே அகற்றி விடுங்கள். இல்லை எனின் அது மாணவர்களின் கவனத்தை திசை திருப்பும்.
18. கருத்துக்களை தெரிவிக்கும் போது பேசும் போதும் நடிப்புடன் உணர்ச்சிகள் வெளிப்படக்கூடியவாறு பேசுங்கள். தெளிவின்மை, திக்குதல், இழுத்தல் கவர்ச்சி இன்மை என்பவற்றை தவிர்த்துக்கொள்ளுங்கள்
19. பிள்ளைகளின் சுயமரியாதையை மதித்திட பழகுங்கள். உறவு நிலைகளில் எல்லைகளை பேணுங்கள்.அவர்களின் மனநிலையை புரிந்து கொள்ளுங்கள். பிள்ளைகளின் தனிப்பட்ட விருப்பங்களையும் உணர்வுகளையும் மதியுங்கள். குழந்தைகளை சமமாக போற்றி நேசியுங்கள். பிள்ளைகளின் ரகசியங்களை பேங்கள்.

ஆசிரியர்களான நாம் பிள்ளைகளே முக்கியம் எல்லா பிள்ளைகளும் ஒன்று போல அல்ல என்பதை உணர்ந்து சகிப்புத் தன்மையுடனும் ஏராளமான பொறுமையுடனும் ஈடுபாட்டோடும் நம்மை அர்ப்பணித்தோம் அர்ப்பணிக்கின்றோம் அர்ப்பணிப்போம் எனும் மனநிலையை உருவாக்கி வகுப்பறையை முறையாக நிர்வகித்து கற்றலையும் கற்பித்தலையும் சாத்தியமாக்குவோம்.